# காப்பலூர்

ஆசிரியர்

**க. ஈஸ்வரன்**

பதிப்பாசிரியர்

முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப,

தமிழ்நாடு அரசு

தொல்லியல் துறை

2009

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Tilte | : | **Kappalur** |
| General Editor | : | **Dr. T.S. Sridhar, IAS,**<br>Principal Secretary & Commissioner |
| Author | : | **K. Eswaran** |
| Copyright | : | Tamil Nadu State Department of Archaeology |
| Subject | : | History |
| Language | : | Tamil |
| Publication No. | : | 206 |
| Year | : | 2008 |
| Type Point | : | 11 pt. |
| No. of Pages | : | 90 Pages |
| Edition | : | First |
| Year | : | 2009 |
| Type Piont | : | 11 |
| Paper used | : | 80 gsm Maplitho |
| Type Setter | : | Gankarani Kaniniyagam<br>Royapettah, Chennai. Cell : 98840 57267 |
| Printer | : | |
| Publisher | : | Tamil Nadu State Department of Archaeology<br>Tamil Valarchi Valagam,<br>Halls Road, Egmore,<br>Chennai - 600 008. |
| Price | : | Rs. 76/- |

**முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர்
தொல்லியல் துறை.

தமிழ்வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை,
எழும்பூர்,
சென்னை-600 008.

# பதிப்புரை

ஒரு நாட்டின் நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளைக் காலங்காலமாகக் கூறிவருபவை அவ்வவக்கால மக்கள் விட்டுச் சென்ற தொல்பொருட்களும், கலைச்செல்வங்களுமே. அந்த வகையில் பொதுவாக இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் நம் முன்னோர் தம் பதிவுகளாக நாம் காண்பவை கோயில்கள். இக்கோயில்கள் சமய வரலாற்றை மட்டும் நமக்கு எடுத்துக் கூறவில்லை. ஒரு சமுதாயத்தின் நாகரிக, கலை, பண்பாட்டு வரலாற்றை நேர்முகமாக விளக்கும் வகையில் கல்வெட்டுகள், சிற்ப, ஓவிய, கட்டடக் கலைகள், அவ்வக்கால மக்களின் பண்பாட்டு நெறிகள் என அனைத்தையும் அங்கே பொதிந்து வைத்திருக்கின்றது. எனவே தான் இத்தகு பண்பாட்டுச் சின்னங்களைப் பாதுகாப்பது மற்றும் அவற்றின் முக்கியத்துத்தை உலக மக்களுக்கு எடுத்துக் கூறுவது நமது கடமையாகும்.

இவ்வகையில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை ஓராண்டு முதுநிலைப் பட்டயப் பயிற்சியினை இளம் மாணவர்களுக்கு அளித்து, இப்பயிற்சியின் நிறைவில் ஒவ்வொரு மாணவரும் ஒரு கோயிலை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, ஆய்வேடு சமர்ப்பிக்கப் படுகிறது. வரலாறு, கலை, சமுதாயம் பற்றிய அனைத்தும் அதில் செறிவாகக் கூறப்பட்டிருக்கும். பொதுமக்களும் மாணவர்களும் பயனுறும் வண்ணம் அவற்றை அவ்வப்போது துறை நூலாக வெளியிட்டு வருகின்றது.

1995-96ஆம் ஆண்டு பட்டயப் பயிற்சி பெற்ற மாணவர் திரு. க. ஈஸ்வரன் எழுதிய 'காப்பலூர்' என்ற தலைப்பில் கோயில் வரலாறு எழுதியுள்ளார். இவ்வாய்வேட்டில் இவ்வூர், கோயில், செப்பேடு, கலைகள் என அனைத்தும் காலவாரியாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகளின் வாயிலாக இவ்வூரின் தனித்தன்மைகள் பற்றி அறியும் வகையில் பல செய்திகளை இந்நூல் கொண்டுள்ளது.

இவ்வாய்வேட்டினை நூலாக வெளியிடும் வண்ணம் பதிப்புப் பணியினை மேற்கொண்ட கல்வெட்டாய்வாளர்கள் திருமதி அர. வசந்தகல்யாணி, திரு. கி. சு. சம்பத் மற்றும் திரு. இரா. சிவானந்தம் அவர்களுக்கும், நிழற்படம் மற்றும் அட்டைப்படம் வடிவமைத்த நிழற்படமெடுப்பவர் திரு. மு.த. ஸ்ரீதரன் மற்றும் திருமதி தே. சத்தியவதி அவர்களுக்கும் பாராட்டுகள்.

இந்நூல் வெளிவர நிதியுதவி அளித்த தமிழ்நாடு அரசுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே ஆய்வு மாணவர்களும், வரலாற்று ஆர்வலர்களும் பொதுமக்களும் இந்நூலைப் படித்து வரலாற்றினைப் பாதுகாப்பதோடு எதிர்காலச் சந்ததியினருக்கும் வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே என் ஆவல்.

**(தி.ஸ்ரீ. ஸ்ரீதர்)**

முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர்

# பொருளடக்கம்


| வ.எண். | தலைப்புகள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அமைவிடம் | ... | 7 |
| 2. | சமுதாயம் | ... | 11 |
| 3. | வரலாற்றில் காப்பலூர் | ... | 16 |
| 4. | திருக்காமீசுவரர் திருக்கோயில் | ... | 20 |
| 5. | விஜயராகவப் பெருமாள் கோயில் | ... | 27 |
| 6. | சங்கரநாராயணர் கோயில் | ... | 30 |
| 7. | மற்ற கோயில்கள் | ... | 31 |
| 8. | கற்சிலைகளும் செப்புச் சிலைகளும் | ... | 35 |
| 9. | திருவிழாக்கள் | ... | 41 |
| 10. | செப்பேட்டில் காப்பலூர் | ... | 45 |
| 11. | கல்வெட்டுச் செய்திகள் | ... | 47 |
| 12. | கல்வெட்டுகளில் சமுதாயம் | ... | 53 |
| 13. | கல்வெட்டுகளில் கொடைகள் | ... | 55 |
| 14. | சிறப்புச் செய்திகள் | ... | 58 |
| 15. | கல்வெட்டுகள் | ... | 61 |
| 16. | துணை நின்ற நூல்கள் | ... | 76 |
| 17. | நிழற்படங்கள் | ... | |

# அமைவிடம்

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம், போளூரிலிருந்து செங்கம் செல்லும் சாலையில் கலசப்பாக்கம் என்ற ஊரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. விழுப்புரம், காட்பாடி செல்லும் தொடர்வண்டிப் பாதையில் போளூர் நிலையத்திலிருந்து நகரப் பேருந்து உதவியுடனும் இவ்வூரை அடையலாம். இவ்வூர் 79$^{0}$.5'' தீர்க்க ரேகை மற்றும் 12$^{0}$.2'' அட்ச ரேகையில் அமையப் பெற்றுள்ளது.

## இயற்கை அமைப்பு

ஜவ்வாது மலை அடிவாரத்தில் துஞ்சியம்மலைக்குக் கிழக்கு பகுதியிலும் சேயாறு நதியின் தெற்குப் பகுதியிலும் இவ்வூர் காணப்படுவதால் ஆண்டு முழுவதும் பசுமையோடு அமைந்துள்ளது. இவ்வூரின் கிழக்கே வண்ணாங்குளம், குருவி மலை ஆகிய ஊர்கள் உள்ளன.

## ஊர்பெயர்க் காரணம்

சோழர் காலத்தில் சிறப்பாக விளங்கிய ஊர்களில் ஒன்றாகிய இவ்வூர், காப்பு, அரண் ஆகியவற்றைக் கொண்ட ஊராதலின் இவ்வூருக்கு காப்பூர், காமப்புல்லூர், காப்பலூர் எனும் பெயர்கள் பெற்றுள்ளன.

காமம் என்பது ஆசை, ஆசை தீர அருள் கொடுப்பவர் எனும் பொருளில் 'காமீசுவரர்' என்ற பெயரில் இவ்வூர் இறைவனுக்கு அமைந்துள்ளது.

இவ்வூர்க் கல்வெட்டுகளில் இவ்வூர் 'காமப்புல்லூர்' என்றே அழைக்கப்படுகிறது. பல்லவர் காலப் புல்லூர் செப்பேட்டில் கூட இவ்வூர் 'காமப் புல்லூர்' என்றே குறிக்கப்பெறுகிறது.

## காப்பலூரைச் சுற்றியுள்ள கிராமங்கள்

காப்பலூருக்குக் கிழக்கே - குருவி மலை, மேற்கே - வன்னியனூர், வடக்கே - காங்கேயனார், தெற்கே - கலசப்பாக்கம் இவை தவிர, தென் மேற்கே - பூண்டி, வட மேற்கே - பேட்டை (அ)விளைகாரன் குளம், தென் கிழக்கே - வண்ணாவாம் பட்டு, வட கிழக்கே - புக்காவம் பட்டு, புதுப்பாளையம் எனப் பல கிராமங்கள் இவ்வூரைச் சுற்றி உள்ளன.

மேலும் இன்று நாயுடு மங்கலம் என அழைக்கப் பெறுகின்ற ஊர், புல்லூர்ச் செப்பேட்டில் 'நயதீரமங்கலம்' என்றழைக்கப்படுகிறது. இவ்வூர் காப்பலூரிலிருந்து நான்கு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மேலும், கல்வெட்டில் இடம் பெறுகின்ற வசூர் கோட்டம் இன்று வசூர் கிராமம் என்ற பெயரில் ஊராகவும், இவ்வூர் அருகே அமையப் பெற்றுள்ளது. செப்பேட்டில் குறிக்கின்றவாறே இவ்வூர் செய்யாறு நதியின் தென்கரையில் அமைந்துள்ளது.

**திருக்குளம்:-** திருக்காமீஸ்வரர் ஆலயத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள இக்குளம் திருக்குளம் என்றழைக்கப்படுகிறது. இக்குளம் இன்றைய நிலையில் தண்ணீர் இல்லாமல் வரண்டு காணப்படுகிறது.

**தாமரைக் குளம்:-** இவ்வூர் கோடியில் அமையப் பெற்றுள்ள இக்குளத்தில் தாமரையும், அல்லியும் அதிகமாகக் காணப்படுகின்றன. இக்குளத்தின் தென்புறமும், வடக்குப் புறமும் இறங்குவதற்கு வசதியாகப் படிகட்டுகளும், குளத்தைச் சுற்றிலும் சில சிற்றாலயங்களும் காணப்படுகின்றன.

**ஏரி**

போளூர் வட்டத்தில உள்ள ஏரிகளில் இவ்வூர் ஏரி இரண்டாம் நிலை வகிக்கிறது. இதனால் இதை, ''இரண்டாம் நிலை'' ஏரி என்று அழைக்கப்படுகிறது. செய்யாறு நதியில் இருந்து இவ்வேரிக்கு கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. இதற்கு 'சுந்தரம் கால்வாய்' என்று பெயர். இவ்வூரின் மேற்குப் பகுதியில் அமையப் பெற்ற, ''தஞ்சியம்'' மலையிலிருந்து இவ்வேரிக்கு வரும் கால்வாய் இயற்கையாக அமையப் பெற்றதாகும். இவ்வேரியில் சுந்தரம் மதகு, வடக்கு மதகு, நடு மதகு என மூன்று மதகுகள் உள்ளன.

**விவசாயம் :**

இவ்வூரின் முக்கிய தொழிலாக விவசாயம் இருந்து வருகிறது. பழங்காலந்தொட்டே கரும்பும், நெல்லும் முக்கிய பயிர்களாகப் பயிரிடப் படுகின்றன. ஆண்டு முழுவதும் விவசாயம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. விவசாயத்தைத் தவிரப் பிற தொழில்கள் இவ்வூரில் காண்பது அரிது.

**கற்பலகைத் தூண்கள் :**

இவ்வூரில் விஜயநகரர் காலத்தில் நடப்பட்டுள்ள நான்கு கற்பலகைகள் நான்கு திசைகளிலும் காணப்படுகின்றன. இப்பலகையின் ஒருபுறம் சூலம், குத்துவிளக்கு, பிறை போன்ற உருவங்களும் மற்றொரு புறம் பன்றி, மற்றும் கத்தியும் காணப் படுகின்றன.

## தெருக்கள்

வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வூரில் 12க்கும் மேற்பட்ட தெருக்கள் உள்ளன. ஒவ்வொரு தெருவிற்கும் வரலாற்று அடிப்படையில் பெயர்கள் அமைந்துள்ளன.

மிகவும் தொன்மை வாய்ந்த ஊராதலின் சமுதாயத்தின் அடிப்படையில் தெருக்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அதே போல் அவ்வவ் இனத்தவர்களே இத்தெருக்களில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வூரில் அமையப் பெற்ற கோயில்களில் நடைபெறுகின்ற திருவிழாக்கள் குறிப்பிட்ட தெருக்களில் நடைபெறுவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

1. திருஊடல் தெரு
2. கணக்கர் தெரு
3. கீழ்த் தெரு
4. நடுத் தெரு
5. ஒத்தவாடைத் தெரு
6. நன்னிவீளச்சி தெரு
7. புளியந்தோப்பு தெரு
8. கருமாரத் தெரு
9. மாணிக்க விநாயகர் கோயில் தெரு
10. நயினார் தெரு

என்று தெருக்கள் இக்கிராமத்தில் உள்ளன. தெருப் பெயர்களுக்கான காரணங்களாவன :

**திரு ஊடல் தெரு :** ஒவ்வோர் ஆண்டும் மாட்டுப் பொங்கல் அன்று தேவர்கள் காட்சியும், அண்ணாமலை, உண்ணாமுலை, மாணிக்கவாசகர் அலங்கரிக்கப்பட்டு மூன்று முறை திருவீதி உலா முடிந்தவுடன் ''மண்டகப்படி'' என்ற நிகழ்ச்சிக்காக இத் தெரு கோடியில் இரண்டு பந்தல்கள் போடப்பட்டுக் கீழ்ப் பந்தலில் அண்ணாமலையாரும் மேல் பந்தலில் உண்ணாமுலையாரும் வீற்றிருக்கின்ற காட்சியைத், ''திருஊடல்'' என்கின்றனர். இவ்வாறு நடை பெறுகின்ற இத் தெருவிற்குத் ''திரு ஊடல்'' தெரு என்று பெயர் வழங்கப் பெற்றுள்ளது.

**கணக்கர் தெரு :** பழங்காலத்தில் இருந்தே இத்தெருவில் கணக்கர்கள் வாழ்ந்து வருவதாலும், ஊர் நடப்புக் கணக்குகளை இவர்களே பார்த்து வந்ததாலும் இத்தெருவிற்குக் கணக்கர் தெரு என்று பெயரிட்டனர்.

**கீழ்த் தெரு :** இவ்வூரின் கிழக்குப்புறத்தில் இத் தெரு அமையப் பெற்றதால் இப்பெயர் வந்தது.

**நடுத் தெரு :** ஊரில் நடுப்பகுதியாக (மையத்தில்) இத் தெரு அமைந்துள்ளதால் நடுத் தெரு என அழைக்கப்பட்டு வருகிறது.

**காவாங்கரை தெரு :** காப்பலூர் ஏரியின் நடுவில் இருந்து வருகின்ற கால்வாய் இத்தெரு வழியாகச் சென்று இவ்வூர் நிலங்களை வளப்படுத்துவதால் இத் தெரு காவாங்கரைத் தெரு என்று பெயர்.

**ஒத்தவாடை தெரு :** தெருவின் ஒரு பகுதியில் மட்டுமே வீடுகள் இருந்ததால் இப் பெயர் பெற்றது.

**நன்னிவீராச்சி தெரு :** நன்னீவீராச்சி என்ற பெயருடைய ஒரு கல்வியாளர் இவ்வூர் மக்களுக்கு கல்வி அறிவு தந்து வந்தார். அவர் நினைவாக நன்னிவீராச்சி தெரு எனப் பெயர் பெற்றது.

**கருமாரத் தெரு :** இது இவ்வூரின் விவசாய வேலைகளுக்குத் தேவையான ஏர் உழும் கலப்பை, மண் வெட்டி, கடப்பாறை போன்றவை செய்கின்ற ஆசாரிகளும் (மர வேலை செய்பவர்) கருமாரரும் (இரும்பு வேலை செய்பவர்) இருப்பதனால் இப்பெயர் பெற்றது.

**மாணிக்க விநாயகர் கோயில் தெரு :** இத் தெருவின் தெருக் கோடியில் விநாயகர் கோயில் அமைத்து வழிபட்டு வந்த பின்னர் புதிய வீடுகள் இங்கு குடியேறியவுடன் இத் தெரு மாணிக்க விநாயகர் கோயில் தெரு என்று பெயர் பெற்றது.

**நயினார் தெரு :** இத் தெருவில் நயினார், நீர் பூசிநயினார் என இரண்டு வகையான நைனார்கள் வாழ்ந்து வருவதால் இப்பெயர் பெற்றது.

இரு பிரிவினர் அன்றி வேறு யாரும் இத்தெருவில் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

# சமுதாயம்

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இவ்வூரில் சுமார் 15 க்கும் மேற்பட்ட சாதிப் பிரிவினரும் அந்தந்தச் சமுதாயத்துக்குரிய வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். இவ்வூரினர் விவசாயம் மற்றும் விவசாயம் தொடர்பான தொழிலையே மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வூர்க் கல்வெட்டுகள் மூலம் அக்கால மக்களின் நிலையினை அறிய முடிகிறது. இன்றைய சூழ்நிலையில் அகமுடையாளர்கள்(உடையார்கள்) என்பவர்களே இவ்வூரின் மக்கள் தொகையில் பெருமளவு உள்ளனர். இதர பிரிவினர் சிறிதளவே உள்ளனர். பெருமளவில் உள்ள உடையார் வகுப்பைச் சார்ந்த பிரிவினர் விவசாய தொழிலை மட்டுமே மேற்கொள்கின்றனர்.

இவ்வூரில் உள்ள சாதிப் பிரிவுகள் பரம்பரையாகச் செய்து வந்த தொழில்களையே இன்றும் செய்து வருகின்றனர்.

உதாரணமாக தினசரி நடக்கும் இரு வேளை கோயில் பூசைகளுக்குத் தேவையான மலர் கொண்டு வருவது மருத்துவர் குலத்தை சார்ந்த பண்டாரம் என்பவராவார். மேளம் கொட்டும் வேலையையும் இவர்கள் செய்கின்றனர். இதே போல் பறையடிக்கும் வேலைகள் இக் கிராமத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் செய்கின்றனர். மண் உடையார், ஆசாரிகள், சலவையாளர், அவர்களுக்குரிய வேலைகளைச் செய்து வருகின்றனர்.

**சாதி பிரிவுகள்:-**

1. அகமுடையார் (உடையார்கள்)
2. நயினார்கள் (ஜைனர்கள்)
3. நீறு பூசு நயினார்கள்
4. கவுண்டர்(பண்டாரர்)
5. கோனார் (யாதவர்)
6. நாயக்கர்

7. முத்தரையர்

8. கணக்கர்

9. உடையார் (குயவர்)

10. வண்ணார் (சலவையாளர்)

11. பண்டிதர் (மருத்துவர்)

12. ஆசாரிகள் (இரும்பு, மரம்)

13. இருளர்(குளம் காவலர்)

14. வள்ளுவ பண்டாரர்

15. 1. மேட்டுக் காலனி

2 ஈசங்காட்டுக் காலனி

3. கீழ்க் காலனி

மேற் கூறப்பட்ட 15 வகையான சாதிப் பிரிவுகள் இவ்வூரில் இடம் பெறுகின்றன. இவற்றுள் அகமுடையார் (எ) உடையார் என்பவர்களே அதிக அளவில் இருக்கின்றனர். மற்ற பிரிவினர் குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றன.

**அகமுடையார்கள் :**

உடையார் என்று அழைக்கக் கூடிய அகமுடையார் இவ்வூரில் அதிகமாக வாழ்கின்றனர். இவர்களது முக்கிய தொழில் விவசாயமாகும். இவ்வூரில் நடக்கின்ற கோயில் திருவிழாக்களில் இவர்களின் பங்கே அதிகமாகும். இவ்வூர் நாட்டாமை உரிமை இவர்களுக்கே உண்டு.

**நயினார் :**

இவ்வூரில் உடையார்களுக்கு அடுத்தபடியாக இவர்களே வகிக்கின்றனர். சமண சமயத்தைச் சார்ந்த இந்த நயினார்கள் சமணக் கோயில் தவிர இந்து கோயில்களுக்குச் செல்திில்லை. சைவ உணவுப் பழக்கம் உடைய இவர்கள் காலையும், இரவும் சிற்றுண்டி உணவையே உண்கின்றனர். மாலை ஆறு மணிக்கு மேல் சாப்பிடும் வழக்கம் இவர்களிடமில்லை.

**நீர் பூசு நயினார்கள் :**

இவர்கள் நெற்றியில் திருநீறு பூசுவதால் நீறுபூசு நயினார்கள் என்றழைக்கப் படுகின்றனர். மேலும் இவர்கள் இந்துக் கோயிலுக்கும் சென்று வழிபாடு செய்கின்றனர்.

**கவுண்டர் :**

இவ்வூரில் கவுண்டர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. இவர்கள் இக்கோயில்களில் பண்டாரம் வேலையைச் செய்கின்றனர். பூசை நேரங்களில் இறைவனுக்குப் பூமாலை செய்து வருதல் இவர்களது முக்கியப் பணியாகும்.

**கோனார் (யாதவர்) :**

யாதவர் என்றழைக்கக் கூடிய இவர்கள் பரம்பரையாக ஆடு, மாடு மேய்க்கும் தொழிலை செய்து வந்தாலும் இப்பொழுது காலத்திற்கே ஏற்ப இவர்களும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**நாயக்கர். (வன்னியர்):**

நாயக்கர் (வன்னியர்) என சிறப்புப் பெயருடைய இவர்கள் குறைந்த எண்ணிக்கை யிலேயே உள்ளனர்.

**முத்தரையர்:**

முத்து ராஜாக்கள் என்றழைக்கக்கூடிய இவர்கள் குறைந்து அளவிலேயே உள்ளனர். இவர்கள் திருச்சி மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் உள்ளனர்.

**கணக்கர்:**

சைவ உணவு பழக்கத்தை உடைய இவர்கள் இவ்வூரில் ஒரு தெரு முழுவதும் உள்ளனர். ஊரின் வரவு, செலவுக் கணக்குகளை பார்க்கும் தொழிலைச் செய்து வருகின்றனர்.

**உடையார்:**

மண் உடையார்கள் என்றழைக்கக் கூடிய இவர்கள் இவ்வூருக்குத் தேவையான மண் பானைகள் செய்து வருகின்றனர். ஆண்டுக்கு ஒரு முறை கூலியாகக் கலன் நெல் பெற்றுக் கொள்கின்றனர்.

**வண்ணார்:**

இவர்களுடைய குலத் தொழிலான சலவைத் தொழிலை மேற்கொள்கின்றனர். இவர்கள் துணி துவைப்பதற்கென்று ஒரு தனி இடம் உண்டு. இதற்கு, "வண்ணாந் துறை" என்று பெயர்.

**பண்டிதர்:**

முடிவெட்டுதல் தொழிலைச் செய்யும் இவர்கள் தங்கள் முடிவெட்டுதல் கூலியாக தினசரி வீடுகளுக்குச் சென்று சாப்பாடு பெற்றுக் கொள்கின்றனர் மற்றும் கோயில்களில் பூஜை நேரங்களில் மத்தளம் (மேளம்) கொட்டும் பணியையும் செய்கின்றனர்.

### ஆசாரி:

இரும்பு, மரம் ஆகியவற்றினால் செய்யப்படும் பொருள்களைச் செய்வதற்கென்று தனித் தனியாக உள்ளனர். இவ்வூருக்குத் தேவையான விவசாயக் கருவிகள் செய்வது, இவர்களுடைய தொழிலாகும். இவ்வூரில் தங்களுக்குரிய தெருவில் வசித்து வருகின்றனர்.

### இருளர்:

பூசாரிகள் என்றழைக்கக் கூடிய இவர்கள் இவ்வூர் குளத்தினைப் பாதுகாக்கின்றனர். இவர்கள் இக்குளக்கரையிலே குடியிருக்கின்றனர். கோயிலில் தீவட்டி பிடித்தல், பாம்பு பிடித்தல் ஆகிய தொழிலையும் செய்கின்றனர்.

### வள்ளுவ பண்டாரம்:

வள்ளுவப் பண்டாரம் தாழ்த்தப்பட்டோர் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் (திருமணம்) கலந்துகொண்டு முக்கிய பங்காற்றுகின்றனர். இவர்களை அய்யர் எனவும் அழைக்கின்றனர்.

### பள்ளிக்கூடம் மற்றும் அலுவலகங்கள்

இவ்வூரில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஒன்று உள்ளது. உயர்நிலை, மேல் நிலை வகுப்புகளுக்கு அருகில் உள்ள கலசப்பாக்கம் மேல்நிலைப் பள்ளிக்குச் சென்று பயின்று வருகின்றனர். இவ்வூரில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, ஊட்டச்சத்து மையம் ஆகியவை உள்ளன.

### நாட்டாமை உரிமைகள்:-

ஒவ்வொரு சாதிப் பிரிவிலிருந்தும் ஒருவர் நாட்டாமையாக நியமிக்கப் படுகின்றனர். திருவிழாக் காலங்களில் இவர்களுக்கென்று சில வேலைகளை கவனிக்க நியமிக்கப்படுவர். இவர்களுக்கு என்று சில உரிமைகளும் வழங்கப்படும். இவ்வாறு நியமிக்கப்படும் நபர்கள் நன்னடத்தை உள்ளவர்களாக இருக்க வேண்டும். இதே போல் ஒவ்வொரு கோயிலுக்கும் தர்மகர்த்தாக்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் தலைமையில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

### இவ்வூரில் வழங்கும் வழக்குச் சொற்கள்

| | | |
|---|---|---|
| நொள்ளை | - | குருடு |
| குபார் | - | குழப்பம் |
| சேந்துதல் | - | நீர் இறைத்தல் |

| | | |
|---|---|---|
| தோண்டி | - | நீர் முகக்கும் பாத்திரம் |
| வாராவதி | - | பாலம், அணைக்கட்டு |
| மந்தைவெளி | - | ஊர் மாடுகள் நிற்குமிடம் |
| நாஷ்டா | - | காலை உணவு |
| மொந்தை, பல்லா | - | மட்பாண்டங்கள் |
| கொட்டனம் | - | அரிசி வியாபாரம் |
| ரவ | - | சிறிது |
| அத்தை எடு | - | அதை எடு |
| இத்தை எடு | - | இதை எடு |
| கண்ணேறு | - | திருஷ்டி |
| கொடுவாள் | - | வளைவாய் செய்யப்பட்ட வெட்டும் கத்தி |
| களக்காய் | - | நிலக் கடலை |
| புழுதி ஓட்டல் | - | நிலத்தில் ஏர் உழுதல் |
| சேடை கலக்கல் | - | தண்ணீர் பாய்ச்சி ஏர் ஓட்டுதல் |

# வரலாற்றில் காப்பலூர்

கல்வெட்டுகளில் காமப்புல்லூர் என்று அழைக்கப்படும் இவ்வூருக்கு நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியுண்டு என்பதனை இவ்வூர்க் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது.

**பல்லவர் காலம்:**

பல்லவ மன்னன் நந்திவர்மனின் புல்லூர்ச் செப்பேட்டில் குறிக்கப்படும் 'புல்லூர்' இவ்வூரே ஆகும். காமீசுவரமுடையார் கோயில் முன்மண்டபச் சுவரிலும், அம்மன் கோயில் சுவரிலும் முறையே நந்திவர்மன், கம்பவர்மனின் துண்டுக் கல்வெட்டுகள் உள்ளன. (இ.கல்.ஆ. 1938-39, 277, 252) இதனில் நந்திவர்மன் கல்வெட்டுச் செய்தி அறிய முடியவில்லை. கம்பவர்மனின் கல்வெட்டில் உறுப்புட்டூர் நரசிங்கத் திருவேதி என்பவருக்குக் காமப்புல்லூர் சபையினர் நிலம் கொடுத்த செய்தியினைக் கூறுகிறது. இவற்றை நோக்கும் போது வேதமறிந்த அந்தணர்களுக்குச் செய்யாற்றங்கரையில் அமைந்த இவ்வூர் நிலங்கள் பிரம்ம தேயமாகக் கொடுக்கப்பட்டதும் பிற இடங்களிலிருந்து அந்தணர் களை அழைத்து வந்து இவ்வூரில் குடியேற்றப்பட்டதும் பல்லவர்காலக் கல்வெட்டால் அறிகின்றோம்.

**சோழர் காலம்:**

சோழர் காலத்தைச் சேர்ந்த 35 கல்வெட்டுகள் இவ்வூரில் காணப்படுகின்றன. அவை மதிரை கொண்ட பரகேசரி வர்மனான பராந்தகன் (907 - 955), மதிரை கொண்ட ராஜகேசேரி வர்மனான சுந்தரச் சோழன், (956 - 978), சோழன், வீர பாண்டியன் முடித்தலை கொண்ட பரகேசரி வர்மனான ஆதித்த கரிகால சோழன் (956 - 969), முதலாம் இராஜ ராஜ சோழன் (985 - 1014), முதலாலம் இராஜேந்திர சோழன், (1012 - 1014), வீரராஜேந்திரன் (1063 - 1070), இராஜாதிராஜன் (1163 - 1178), குலோத்துங்க சோழன் (1178 - 1218), மூன்றாம் இராஜராஜ சோழன் ஆகியோருடையதாகும்.

**முற்காலச் சோழர்:**

சோழர் காலத் தொடக்கத்தில் நிறையப் போர்கள் நிகழ்ந்ததன் காரணமாகத் தொண்டை நாட்டில் சோழர்களின் முழுமையான ஆதிக்கம் முதலாம் இராஜராஜன்

காலத்திற்கு முன்பு வரை சரிவர நிலைக்கவில்லை. முற்காலச் சோழகளான பராந்தகன், ஆதித்த கரிகாலன், சுந்தர சோழன் ஆகியோரின் கல்வெட்டுகள் காப்பலூரில் கிடைப்பது குறிப்பிடத் தக்கதாகும். தொண்டை மண்டலப் பகுதி பராந்தர சோழனின் மகன் இராஜாதித்தன் (948 - 949) பொறுப்பில் இருந்தது. இவன் இராஷ்டிர கூட மன்னன் கன்னரதேவனுடன் நிகழ்ந்த தக்கோலப் போரில் உயிர் நீத்தான். இவனது கல்வெட்டு இவ்வூரில் இல்லை. ஆனால் இராட்டிர கூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனான கன்னரதேவனின் மூன்று கல்வெட்டுகள் காணப்படுகின்றன. எனவே சோழரது பிடியில் இப்பகுதி வலுவாக இல்லை என்பதை அறிய முடிகிறது. இங்கு கிடைத்துள்ள முற்காலச் சோழரின் கல்வெட்டுகளில் மதுரை கொண்ட இராஜகேசரி சுந்தரசோழன், வீரபாண்டியன் தலை கொண்ட கரிகாலன் ஆகியோருடையவை. இவர்களது விருதுப் பெயர்களின் வாயிலாக இவர்கள் பாண்டிய நாட்டிலே கவனம் செலுத்தி வந்ததை அறியலாம்.

**இராட்டிரகூடர்:**

கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னர தேவன் ஆன மூன்றாம் கிருஷ்ணன் தமிழக எல்லையோரச் சிற்றரசரான கங்கரின் உதவியை பெற்றிருப்பினும் முதலாம் பராந்தக சோழனின் கவனம் பாண்டிய நாட்டில் இருந்ததால் தொண்டை நாட்டின் மீது படையெடுத்து வெல்லவும் பராந்தகனின் மகன் இராஜாதித்தனைத் தக்கோலப் போரில் வெல்லவும் காரணமாக இருந்தது எனலாம். தொண்டை மண்டலத்தின் தலைமையிடமான காஞ்சியைக் கைப்பற்றியதோடு சோழரையும் வீழ்த்தியதால் இவன், 'கச்சியும் தஞ்சையும்' கொண்ட என்ற விருதுப் பெயரைச் சூட்டிக் கொண்டான். தஞ்சை வரை இவன் செல்ல வில்லை. புதுச்சேரி வரையே இவனது கல்வெட்டுகள் கிடைக்கின்றன. காப்பலூரில் கிடைக்கும் இவனது கல்வெட்டுகள் ஊர் நடுவே இருந்த மண்டபத்தில் விளக்கெரிக்கவும், (க.எண் 274) பிராமணர்களுக்குப் பட்டவிருத்தியாக நிலம் ஆளுங்கணத்தார் கொடுத்ததும் (க.எண்.272) கல்வி அறிவாளர்களுக்கான தானப்புறம் ஆளுங்கணத்தார் வாங்கியதும் (க.எண்.269)குறித்துச் சொல்கின்றது. இவை இவனது 25 வது ஆட்சி ஆண்டைச் சேர்ந்தவை. எனவே இக்கால கட்டத்தில் கோயில் நடவடிக்கைகளை விட பிராமணர்களைப் போற்றும் நடவடிக்கையே இருந்தது என்பது தெரிகிறது.

**பிற்காலச் சோழர்:**

காப்பலூரில் முதலாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டு (க.எண். 265)ஒன்றுள்ளது. ''திருமகள் போல'' என மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு கலி ஆதித்த விண்ணகரர் கோயில் முக மண்டபத்தில் ஆளும்கணத்தைச் சேர்ந்த ஒருவன் விளக்கெரிப் பிற்காக நிலம் கொடுத்தது பற்றிக் கூறுகிறது.

''திருமன்னிவளர'' என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் முதலாம் இராஜேந்திரன் கல்வெட்டு (262) **ஜனநாத விண்ணகர் பள்ளி கொண்டருளின தேவர் பெருமான்**

**கோயில் வழிபாட்டிற்கு இறையிலியாக நிலம் அளிக்கப்பட்டுள்ளது.** ஜனநாதன் என்ற பெயர் முதலாம் இராஜராஜனுடைய பட்டப் பெயராகும். மேலும் இக்கல்வெட்டில் முதலாம் இராஜராஜ சோழன் பெயரில் தொண்டை மண்டலம், ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்ற அழைக்கும் மரபு வந்துள்ளமையும் காண்கின்றோம். ஏற்கெனவே இருந்த கலி ஆதித்த விஷ்ணு கிருகத்தில் 'ஜெனநாத விண்ணகர்' ஒன்று உண்டாகியுள்ளது. இக்காலக் கட்டத்தில் கோயில்கள் கட்டும் பணி நிகழ்ந்ததைக் காட்டுகிறது.

முதலாம் இராஜேந்திரனுக்குப் பின் அவனது மகனான வீர ராஜேந்திரன் கல்வெட்டு (க.எண். 257) சிவன் கோயிலில் காணப்படுகிறது. ''வீரமே துணையாக'' என்று தொடங்கும் இக்கல்வெட்டு முற்றுப் பெறாத ஒன்றாகும். இது சபை கொடுத்த நிலக் கொடை பற்றியதாகும்.

மேலும் குலோத்துங்க சோழன், இராஜராஜ சோழன் கல்வெட்டுகளும் உள்ளன. இவை மூன்றாம் குலோத்துங்கன் மூன்றாம் இராஜராஜன் ஆகியோரது காலத்தியவை. இவை சிவன், திருமால் கோயில்கள் இரண்டிலும் காணப்படுகின்றன. ஆணை கட்டின பிரிதிவிகங்கன், குலோத்துங்க சோழ பிரிதிவிகங்கன் என்ற சிற்றரசர்கள் இவர்களது கல்வெட்டுகளில் காணப்படுகின்றனர். (க.எண், 255, 256, 258, 264, 275, 278, 279, 288). இவை கோயில்களுக்கு நிலம் கொடுத்தது, நந்தவனம் அமைத்தது, மடைப்பள்ளிச் செலவுக்கு நிலம் கொடுத்தது பேன்ற செய்திகளைச் சொல்கின்றன. இவர்கள் கங்கர் குலச் சிற்றரசர்களாக இருக்க வேண்டும். சோழராட்சியின் இறுதிப்பகுதியில் நாடு முழுவதுமான அரசின் நேரடி ஆதிக்கம் குறைந்து போனது. எனவே அவ்வப் பகுதிகளில் இருந்த சிற்றரசுகளின் ஆதிக்கம் சோழருக்கு மேலோட்டமாக கட்டுப்பட்டதாகவும் உண்மையில் தனிப்பட்டதாகவும் இருந்தது. காப்பலூரில் காணப்படும் பிரிதிவிகங்கனின் கல்வெட்டுகள் இதையே எடுத்துக் காட்டுகின்றன.

**பிற்காலப் பாண்டியர் :**

சோழராட்சிக்கு பிறகு தமிழகம் முழுவதும் மேலும் ஆந்திரம் வரையிலும் பிற்கால பாண்டியரின் ஆட்சியின்கீழ் இருந்தது. ஆனால் காப்பலூரில் இவர்களது கல்வெட்டுகள் ஒன்றுகூட இல்லாதது வியப்பளிக்கின்றது.

**சம்புவராயர் காலம் :**

சகலலோக சக்கரவர்த்தி இராஜநாராயணனின் கல்வெட்டு (க.எண்.256) ஒன்று இவ்வூரில் உள்ளது. சம்புவராயர்கள் படை வீட்டினைத் தலைநகராக் கொண்டு தொண்டை மண்டலப் பகுதியில் ஆட்சி புரிந்தவர்களாவர். சகலலோக சக்கரவர்த்தி இராஜநாராயணன் என்பவன் சம்புவராய மன்னர்களில் குறிப்பிடத்தக்கவனாவான். இவனது கல்வெட்டு சில வரிகளை விலக்களித்து அவ்வருவாயைக் கோயிலுக்கு பயன்படுத்துவது தொடர்பாக

ஊரவருக்கு வழங்கிய ஆணையாகும். சோழர் காலத்தில் நிலக்கொடைகளுக்கு வரிவிலக்கு தந்த நிலை இக்காலத்தில் வரிகளையே கொடையாகக் கொடுக்கும் நிலைக்கு வந்ததை இக்கல்வெட்டு உணர்த்துகிறது.

**விஜய நகரர் காலம் :**

விஜய நகர அரசர்களான அச்சுதேவ மகாராயர் சகம் 1462(க.எண். 247, 289) சகம் 1454(க.எண்.246) ஸ்ரீரங்கராய தேவகாராயர்((க.எண்.280)தேவமகாராயர் சகம் 1401 (க.எண்.285) ஆகியோரின் கல்வெட்டுகள் காப்பலூரில் உள்ளன. முகமதியரின் படையெடுப்பிற்கு பின் தென்னகத்தை இந்து சமயத்திற்குத் திருப்பியவர்கள் விஜய நகரப் பேரரசர்கள் ஆவர். அவர்களில் தேவராய மகாராயர், அச்சுததேவ மகாராயர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர் ஆவர். ஸ்ரீரங்கராயர் என்பவர் விஜயநகரப் பேரரசின் இறுதி மன்னர்.

இவர்களது கல்வெட்டுகளுள் சாளுவ நரசிங்க தேவராயரின் பிறந்த நட்சத்திரமான அனுசத்தில் வழிபாடுகள் நிகழ வரி வருவாய் தந்தது (க.எண்.285) பிராமணர்களுக்கு வீட்டுமனை தந்தது. (க.எண்.289) அர்ச்சகர்களுக்கு அர்ச்சனாவிருத்தியாக நிலம் தந்தது (க.எண்.245). நகரத்தாரால் பிரதிஷ்டை செய்த அம்மன் கோயிலுக்கு நிலம் தந்தது ஆகியவை (க.எண்.246)குறிக்கத் தக்கனவாகும்.

காப்பலூரில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரையான கல்வெட்டுகள் வழியாக அவ்வக் காலங்களில் நிகழ்ந்த அரசியல் மாறுபாடுகளில் இவ்வூர் பங்கேற்று நீண்டதொரு வரலாற்றைப் பெற்று விளங்குகின்றது என்பதை உணர்கிறோம்.

# திருக்காமீசுவரர் திருக்கோயில்

## கருவறை

இக் கோயிலின் கருவறை 11 அடி நீளம் 10 அடி அகலம் கொண்டதாக அமையப் பெற்றது. இதன் மையப்பகுதியில் ஆவுடையார் மீது லிங்கம் பொருத்தப்பட்டுள்ளது. கருவறையின் வடக்குப் புறம் நீர் வெளியேறும் நாளம் காணப்படுகிறது. கருவறையின் மேல் பகுதி கற்களால் மூடப்படாமல் மரக்கட்டைகள் கொண்டு மூடப்பட்டுள்ளது. இதன் மேல் செங்கல்லால் விமானம் எழுப்பப்பட்டுள்ளது. கருவறை முறையே உபபீடம், அதிஷ்டானம், பாதம், பிரஸ்தரம், கண்டம், சிகரம்,கலசம் என்ற பிரிவுகளை உடையதாக அமைந்துள்ளது. தற்பொழுது உபபீடப் பகுதி வரை மண்ணால் மூடப்பட்டுள்ளது. ஜகதிப் பகுதியில் இருந்து வெளியே தெரிகிறது. கண்டம், பட்டிகை போன்ற அமைப்புகளைக் கொண்ட இக் கருவறை அமையப் பெற்றுள்ளது.

## தூண்கள்

இங்குள்ள தூண்கள் பத்மம், பலகை, வீரகண்டம், கலசம், போன்ற பகுதிகளைக் கொண்டுள்ளது.

## விமானம்

விமானத்தின் மேற்பகுதி பிரஸ்தரம், கீரிவம், சிகரம் போன்ற அமைப்புகளுடன் காணப்படுகின்றது. வேலைப்பாடு அமைந்த கூடுகள், ஒவ்வொரு கூட்டிற்கும் இடையில் மாலை போன்ற அமைப்பு காணப்படுகின்றது.

## கோட்டங்கள்

கபோதத்தின் மேல் சிறிய யாளிவரி திருப்பங்களில் பெரிய முகமுடைய யாளிகள், கயல்பாறை, ஆடல் மகள், தவம் இருக்கும் முனிவர் ஆகிய உருவங்கள் இடம் பெற்றுள்ளன. சில இடங்களில் யாளிவரி சிதைந்துள்ளது.

சிகரத்தின் மீது மாலைகள் போன்ற அமைப்பு காணப்படுகின்றது. சிகரத்தின் மீது கலசம் பொருத்தப்பட்டுள்ளது.

## திருக்காமீசுவரர் திருக்கோயில்

இக்கோயிலில் தினசரி இரண்டு வேளை வழிபாடுகள் நடைபெறுகின்றன. இக்கோயில் கருவறை அர்த்த மண்டபம், முன் மண்டபம் ஆகிய அமைப்பைக் கொண்டுள்ளது. கோயில் கருவறையில் திருக்காமீசுவரர் என்றழைக்கப்படும் சிவலிங்கம் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறது. இச் சன்னதியின் இருபுறங்களிலும் துவாரபாலகர் உருவங்கள் உள்ளன. முன்மண்டபத்தின் கிழக்குப் புற வாசல் அடைக்கப்பட்டுள்ளது. தென்பகுதி வழியாகச் செல்லவே வாயில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் கிழக்குக் கோபுரம் இரண்டு நிலைகளைக் கொண்டது. கோயிலின் வடக்குப் புறம் அமைந்துள்ள அம்பிகையின் சன்னதி கருவறை மற்றும் சிறிய அளவிலான முன் மண்டபத்துடன் காணப்படுகிறது.

## கோயில் அமைப்பு :

ஒரு சதுரமான கருவறையும் அதன் முன்பாக அர்த்த மண்டபம், முன் மண்டபம் முதல் திருச்சுற்றிலேயே அமைந்துள்ளன. கருவறையின் வடக்குப் பக்கம் அம்மன் சன்னதி உள்ளது. இரண்டாம் திருச்சுற்றில் சுமார் நூறு கல்தூண்களை கொண்ட வசந்த மண்டபம் காணப்படுகிறது. இரண்டாம் சுற்றின் வடக்கில் நடராஜர் மண்டபம் காணப்படுகிறது. நடராஜர் மண்டபத்திற்கு எதிரே கிணறு அமையப் பெற்றுள்ளது. கோயில் வாயிற் புறம் தற்பொழுது தெற்குப் புறமாக உள்ளது. கிழக்குப் புறம் உள்ள வாயிற் அடைக்கப் பட்டிருக்கிறது. துவாரபாலகர் அங்கேயே உள்ளனர். வாயிலுக்கு நேராக உள்ள மண்டபம் திருமண மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இத்திருச்சுற்றின் தென்கிழக்கு மூலையில் ஒரு யாக சாலையும், அதற்கு மேற்கில் ஒரு பழைய மடைப் பள்ளியும் மேற்கு, தென் மேற்கில் ஒரு பெரிய மண்டபமும் உள்ளன.

## கோயில் காலம்:-

இக் கோயில் யாரால் கட்டப்பட்டது என்பதற்கு நேரடியான கல்வெட்டுச் சான்றுகள் எதுவும் இல்லை. திருக்காமீசுவரர் கோயிலின் காணப்படும் கல்வெட்டுகள் மற்றும் அக்கல்வெட்டின் கால அமைதி, எழுத்து அமைதி மற்றும் கட்டடக் கலையைக் கொண்டு இக்கோயில் சோழர் காலத்தைச் சேர்ந்தது எனலாம். கருவறையில் அதிட்டானப் பகுதியில் விஜய நகர பேரரசின் கல்வெட்டு காணப்படுகின்றது. முன் மண்டபத்தின் வடக்கு புறச் சுவர் முழுவதும் விஜயநகரக் காலக் கல்வெட்டுகள் அதிகமாக உள்ளதால் இம்மண்டபம் விஜய நகரர் காலத்தைச் சார்ந்தது எனலாம். இக்கோயில் புதுப்பிக்கும் பணி தொடர்ந்த போது இராஜேந்திர சோழனுடைய மெய்கீர்த்தி கல்வெட்டும் விஜயாலய சோழனின் 3-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றும் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் இக்கோயிலில் நந்தி வர்மனின் 3-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு மற்றும் கம்பவர்மன் கல்வெட்டு ஆகியவை

காணப்படுவதால் இக்கோயில் 8 - ஆம் நூற்றாண்டிலேயே செங்கற் தளியாக எழுப்பப் பட்டிருக்கவேண்டும் எனத் தெரியவருகிறது. இங்குள்ள பழைய சோழர்காலக் கல்வெட்டு களைப் பரகேசரி வர்மனின் 8 - ஆம் ஆண்டு என்று வரலாற்றறிஞர்கள் குறிப்பிடு கின்றனர்.

## துவாரபாலகர்கள்

முன் மண்டப வாயிலின் இரண்டு புறங்களிலும் இரண்டு எழிலார்ந்த துவார பாலகர் எனும் வாயிற் காவலர் சிற்பங்கள் நிற்கின்றன. வலது புறம் உள்ள துவார பாலகர் வலது காலை நேராக ஊன்றி இடது காலைச் சற்று வளைத்து சாய்வாக வைத்து நின்ற நிலை. இடது கையை கதையின் மேல் ஊன்றி வலது கையில் விஸ்மய முத்திரை காட்டுகிறார். முகத்தை சற்று வலம் நோக்கி திருப்பி இனிய மென்மையான புன்னகையை வீசிக் கொண் டிருக்கும் காட்சி மனதை ஈர்க்கின்றது. இதழோரங்களில் இரண்டு வளைந்த பற்கள் காணப் படுகின்றன. தலையில் ஜடா மகுடம் அணிந்து, காதுகளில் பத்ர குண்டலமும் கழுத்தில் மணிகளும் அணிந்து காட்சி தருகிறார். இடது புறம் உள்ள துவாரபாலகர் சிற்பம் நின்ற நிலையில் இடது கை கதையின் மேல் உள்ளது. இடது கை சூசி முத்திரை காட்டி நிற்கிறது.

இரண்டு துவார பாலகர்களும் சுமார் 5 அடி உயரமுடையன. கை, கால்களில் காப்புகளும், விரல்களில் மோதிரங்களும் அழகு செய்கின்றன. இவ்விரு துவார பாலகர்களின் கிழக்கு வாயில் அடைக்கப்பட்டு உள்ளது.

## கோயில் வாயில்

இக்கோயில் வாயில் மிக உயரமானது. வாயில் மேல் கோபுரம் ஏதும் இன்றி சாதாரணமாகவே காட்சியளிக்கின்றது. வாயிற்படிகள் வேலைப்பாடுகள் இன்றிக் காணப்படுகின்றன. வாயிலின் படிகள் சாதாரணமாக உள்ளன. பழமை வாய்ந்த மரத்தால் செய்யப்பட்ட கதவு கலை வேலைப்பாடுகள் இன்றிச் சாதாரணமாக உள்ளன.

## நந்தி மண்டபம்

இக் கோயிலின் எதிர்த் திசையில் நந்தி மண்டபம் காணப்படுகிறது. 1½ அடி உயரம் உள்ள நந்தி கழுத்தில் மணிகள் தொங்க கருவறை நோக்கி அமர்ந்துள்ளது. குட்டையான கொம்புகளும் திரண்ட திமிலும் இந்நந்தியின் பெருமித நோக்கும் கண்டு மகிழத்தக்கவை.

## தூண்கள்

திருக்காமீசுவரர் கோயிலில் 96 முழுத் தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இத் தூண்களின் அடிப்பகுதி சதுரமானது. தூண்கள் சிற்ப வேலைப்பாடுகள் இன்றிக் காணப் படுகிறது. மண்டப விதானத்தின் ஒரு கல்லில் மட்டும் பல்லி உருவம் செதுக்கப் பட்டுள்ளது.

## தட்சிணாமூர்த்தி

அவருக்குரிய மண்டபத்தில் இல்லாமல் இவர் தனியான காட்சி தருகிறார். ஆல மரத்தின் அடியில் சுகாசன முறையில் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார்.

## அம்மன் சன்னதி

இக் கோயிலின் வட பகுதியில் அம்மனுக்கு என்று தனியாகக் கோயில் உள்ளது. இது இரண்டாவது திருச்சுற்றில் காணப்படுகிறது. இக்கோயிலின் மேல் கோபுரம் காணப்படுகிறது. சாதாரண கருவறை அமைப்புடன் உள்ளது.

## கோயில் கிணறு

இக்கோயிலின் வடகிழக்கு மூலையில் சிறிய அளவிலான கிணறு ஒன்று உள்ளது. கிணற்றுக்கு மேல் சிறிய துவாரம் காட்டப்பட்டுள்ளது. வழிபாட்டிற்கு இக்கிணற்று நீரைப் பயன்படுத்துகின்றனர். கிணற்றின் நீர் வெளியேறுவதற்கு வசதியாக மண்டபத்தின் வழியாக வெளியே செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது.

## லிங்கம்

ஆவுடையார் வட்டவடிவாக விளங்குகிறது. சுமார் 2½ அடி உயர வட்டமான பீடத்தின் மேல் 2 அடி லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. கருவறை சதுர அமைப்பில் 10 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்டாதாக அமைந்துள்ளது.

## அர்த்த மண்டபம்

இந்த அர்த்த மண்டபம் கிழக்கு மேற்காக 21 அடி நீளமும் தெற்கு வடக்காக 13 அடி அகலமும் கொண்டது. இச்சுவரின் நுழை வாயிலில் இரண்டு புறங்களிலும் இரண்டு அரைத்தூண்கள் காணப்படுகின்றன. செப்புத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ள மேடை கிழக்கு மேற்காகக் காணப்படுகிறது. இதன் அருகில் பித்தளையில் ஆன நாகம் ஒன்றும், சரவிளக்கு, விசிறி, சின்ன சிறிய விளக்குகள் ஆகியவையும் காணப்படுகின்றன.

## கல்யாண மண்டபம்

கருவறைக்குத் தெற்குப் புறமாக உள்ள இம் மண்டபத்தில் 27 தூண்கள் 3 வரிசையில் வேலைப்பாடுகள் இன்றி வட்ட வடிவம் பெற்ற தூண்களாக உள்ளன. இம் மண்டபத்தின் நடுவே அதாவது கருவறைக்குச் செல்லும் வழியின் நேராகச் சதுரமைப்பில் நான்கு தூண்கள் நிறுத்தப்பட்ட இடத்தினைக் கல்யாண மண்டபம் என்றழைக்கின்றனர்.

## சமயலறை

இக்கோயிலின் திருமண மண்டபத்தின் உள்ளடக்கி தனியாக சமையல் அறை ஒன்று காணப்படுகிறது. திருவிழாக் காலங்களில் இன்றும் இவ்வறை சமையலறையாகப்

பயன்படுத்தப்படுகிறது. இவ்வறையின் நடுவே கழிவு நீர் செல்வதற்கு தனி வழியும் புகை வெளியேறுவதற்கான புகைப்போக்கியும் காணப்படுகின்றன.

### மரப் பெட்டிகள்

கல்யாண மண்டபத்தை ஒட்டிய பகுதியில் மரத்தால் செய்யப்பட்ட பெரிய அளவிலான பெட்டி ஒன்று காணப்படுகிறது. இப்பெட்டியின் உள்ளே சுவாமிக்கு உரிய ஆடைகள், ஆராதனை நேரங்களில் இசைக்கும் இசைக்கருவிகள் வைக்கப்பட்டுள்ளன.

### மடைப்பள்ளி

திருமண மண்டபத்தை அடுத்தும் சமையலறை மதிலோடும் சேர்த்துக் கட்டப்பட்ட மடைப் பள்ளி ஒன்று உள்ளது. ஆனால் இது உபயோகத்தில் இல்லை. இம் மடப்பள்ளியின் கிழக்குச் சுவரில் கல்வெட்டுகள் முற்றுப் பெறாமல் உள்ளன.

### நடராஜர் மண்டபம்

இக்கோயிலின் இரண்டாம் திருச்சுற்றின் வடக்குப் புறமாக உள்ள இம் மண்டபத்தில் நடராஜர் திருமேனி வைக்கப்பட்டுள்ளது. தற்போது மண்டபத்தில் உள்ள இத் திருமேனி யின் அருகே மாணிக்கவாசகர், இராமலிங்க வள்ளலார் ஆகியோரின் திருமேனிகளும் காணப்படுகின்றன. இம் மண்டபத்தின் மேல் சிறிய கோபுரம் அமைந்துள்ளது.

### ராசி மண்டலம்

நடராஜர் மண்டபத்தின் எதிரில் அமைக்கப்பட்டுள்ள மிகச் சிறிய மேடையில் 64 கட்டங்கள் வெட்டப்பட்டுள்ளன.

### நவகிரகங்கள்

அம்மன் சன்னதியின் எதிர்த் திசையில் அமைக்கப்பட்டுள்ள சிறிய மேடையில் நவகிரகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### சண்டிகேசுவரர்

இவருக்கென்று தனிக் கோயில் வட திருச்சுற்றில் அமைந்துள்ளது. தோளில் சாத்திய நிலையில் மழு காணப்படுகிறது. பீடத்தின் மீது வலக்காலை மடக்கி இடது காலை தொங்க விட்ட நிலையில் கழுத்திலும் இடுப்பிலும் கணமான அணியும் ஆடையும் அலங்கரிக்கின்றன.

### லிங்கங்கள்

கருவறையில் உள்ள லிங்கம் தவிர்த்து இக் கோயிலின் இரண்டாம் திருச்சுற்றில் வழிபாடு இல்லாமல் இரண்டு லிங்கம் காணப்படுகின்றன. கிணற்றின் அருகே ஒன்றும் மற்றொன்று இரண்டாம் திருச்சுற்று மதிலை ஒட்டியும் காணப்படுகின்றன. இவற்றினை தோட்டத்தினின்று எடுத்து வந்து வைத்ததாக இவ்வூரார் கூறுகின்றனர்.

## விநாயகர் சிற்பங்கள்

இக்கோயிலினுள் நான்கு விநாயகர் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் இரண்டு சிற்பங்கள் வெளிப்புறத்தில் வைக்கப்பட்டு வழிபாட்டில் மற்றொன்று வழிபாடின்றித் தனியாகக் காணப்படுகிறது. இவற்றை இரட்டை பிள்ளையார் என்றழைக்கின்றனர்.

## சுரங்கம்

திருக்காமீசுவரர் திருக்கோயில் கருவறைக்கு மேற்கே பெரிய அளவிலான படுக்கைக் கல் ஒன்று பெயர்த்தெடுக்கும் பொழுது சுரங்கம் இருப்பது கண்டறியப்பட்டது. சுரங்கத்தின் ஆரம்பப் பகுதி மட்டுமே காண முடிந்தது.

சுரங்கம் மூடப்பட்டுள்ள படுக்கைக் கல்லானது 185 செ.மீ. நீளமும் 138 செ.மீ அகலமும் கொண்டது. அக்கல்லில் 59 வரிகள் கொண்ட தமிழும், கிரந்தமும் கொண்ட ராஜேந்திர சோழனின் 16ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.

## கோயில் மணி

நடராஜர் மண்டபத்திற்கு வெளியே இக்கோயில் மணி கட்டப்பட்டுள்ளது. இம்மணி போளூர் கோ.சி.சம்பத்ராவ் நாயனார் என்பவரால் 12.07.1974 அன்று நன்கொடையாக வழங்கப்பட்டதாகும். இதன் எடை 56.550 கி.கி.ஆகும்.

## மடம்

திருக்காமீசுவரர் ஆலயத்தின் பின்பகுதியில் மிகவும் பாழடைந்த நிலையில் மடம் ஒன்று காணப்படுகிறது. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் வரை இம் மடத்தில் கல்வி கற்பிக்கப்பட்டுள்ளது.

## விளக்குகள்

இக்கோயிலின் முன்மண்டபத்தில் கிழக்கு மேற்காகக் கட்டப்பட்டுள்ள ஒரு மேடையின் மீது பித்தளையால் செய்யப்பட்ட பாவை விளக்குகள், சாமரம், விசிறி போன்ற விளக்குகள் காணப்படுகின்றன. இவைகள் தற்போது பயன்பாட்டில் இல்லை.

## நாகம்

இதே இடத்தில் வட்டவடிவமான தலை தூக்கிப் படம் எடுத்து நிலையில் நாகசிற்பம் ஒன்று காணப்படுகிறது. இச் சிற்பம் வழிபாட்டில்லை.

## மரச் சிற்பங்கள்

### காளை வாகனம்

வெள்ளை நிறம் காளை கம்பீரத் தோற்றத்துடன் நான்குகால்களுடன் நின்ற நிலையில் காணப்படுகிறது. மிகச் சிறிய கொம்புகளை உடைய இக்காளையின் கழுத்தில் மணிகள் தொங்குகின்றன. முகத்தைச் சற்று சாய்த்த நிலையில் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

### மயில் வாகனம்

இச்சிற்பம் பல வண்ணங்களுடன் கூடிய தோகையை விரித்தாடும் நிலையில் உள்ளது. ஒரு காலை பாம்பின் மீது ஊன்றியும் மற்றொரு காலை மடக்கியும் காணப் படுகிறது.

# விஜயராகவப் பெருமாள் கோயில்

**அமைவிடம்**

இக் கோயில் ஊருக்கு மேற்கில் கிழக்கு நோக்கியவாறு 1½ ஏக்கர் நிலப் பரப்பில் அமையப் பெற்றுள்ளது.

இக்கோயிலின் வடக்குப் பகுதியில் காட்சியளிக்கிறார். இக் கோயிலில் வரலாற்றுப் புகழ்பெற்ற இராமர், இலக்குவன், சீதை, அனுமன் ஆகியோருடைய உருவச் சிலைகள் காணப்படுகின்றன. அர்த்தாஞ்சலி அனுமானின் வடிவம் மிகவும் சிறப்பாக உள்ளது. காலிங்கன நர்த்தன உருவத் திருமேனி ஒன்றும் உள்ளது.

இக்கோயில் உபானப் பகுதி மண்ணால் மறைக்கப்பட்டிருந்தாலும் ஜகதிப் பகுதியில் முதல் வெளியே தெரிகிறது. ஜகதி குமுதம், கண்டம், பட்டிகை, போதிகை என்ற கட்டட அமைப்புகளைக் கொண்டுள்ளது.

சுவர்களில் சோழர் காலத் தூண்களும் தேவகோட்டங்களும் காணப்படுகின்றன. கோட்டத்தின்மேல் பூவேலைப்பாடுகள் அமையப் பெற்ற சிற்பங்கள் உள்ளன. தூண்களில் கும்பபஞ்சரம், கலசம், இடைக்கட்டு பகுதிகள் காணப்படுகிறது. சில கோட்டங்களில் மட்டும் இறை உருவங்கள் காணப்படுகின்றன.

இக்கோயில் இரண்டு தளங்களுடன் வேசர சிகரமுடையது. இரண்டு மூலைகளில் பலவித சுதைச் சிற்பங்கள் அமைந்துள்ளன.

கிழக்குப் பகுதியில் சாமரப் பெண்களுடன் தேவி நின்ற நிலையில் காட்டப் பட்டுள்ளன. சாலை கூட அமைப்புகளும், முனிவர் உருவங்களும் காணப்படுகின்றன.

**கருவறையும் அர்த்த மண்டபமும்:-**

இக்கோயில் எழுப்பப்பட்டபோது கருவறை மற்றும் அர்த்த மண்டபம் மட்டுமே இடம் பெற்று இருத்தல் வேண்டும். கருவறையின் பின்பகுதியில் காணப்படும் கல்வெட்டு கம்பவர்மன் காலத்தியது. மற்றும் அதிட்டான பகுதியில் காணப்படும் கல்வெட்டு சோழர் காலத்தியதாகும்.

கருவறை 10 அடி நீளம், 10 அடி அகலம் கொண்டதாக அமையப் பெற்றுள்ளது. அர்த்த மண்டபத்தில் தூண்கள் ஏதுமின்றிக் காணப்படுகிறது. மண்டபத்தின் இடப்புறம் ஒரு மேடை போன்ற அமைப்பில் மேலும் காளிங்க நர்த்தனர் உருவம் உள்ளது.

இம் மண்டபத்தின் வலப்புறம் உள்ள மேடையில் சிறப்பு மிக்க இராமர், இலக்குமணர், சீதை, அனுமன் போன்ற உருவங்களும் உள்ளன. சிறிய கருங்கற்களைக் கொண்டே இம் மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

## மரகதவல்லித் தாயார்

இப்பெருமாள் கோயிலின் தென்பகுதியில் அமையப் பெற்ற 18 தூண்கள் கொண்ட மண்டபம் உண்டு. இம் மண்டபத்தில் உட்பகுதியில் சிறிய கருவறை ஒன்றில் மரகதவல்லி தாயார் உருவம் காணப்படுகிறது.

## ஆண்டாள் சந்நிதி

இக் கோயிலில் திருச்சுற்றின் வடபகுதியில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இக்கோயில் சிறிய கருவறை அமைப்பை மட்டும் கொண்டுள்ளது. இக்கருவறையின் உட்பகுதியில் ஆண்டாள் சிலை நிறுவப்பட்டுள்ளது.

## கௌரி தாயார்

விஜயராகவப் பெருமாள் கோயிலின் வடக்குப் புறமுள்ள மண்டபத்தில் மரகதவல்லி அடுத்த பக்கத்தில் கௌரி தாயார் உருவம் காணப்படுகிறது. இன்றைய நிலையில் இக் கோயில் மண்டபம் அய்யப்ப பக்தர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இம் மண்டபத்தின்மேல் உதிரிச் சிற்பங்கள் இடம் பெறுகின்றன.

## காளிங்க நர்த்தனர்

இக் கோயிலின் முன் மண்டபத்தில் வடக்குபுறச் சுவரில் ஒட்டியவாறு காளிங்க நர்த்தனர் சிலை வைக்கப்பட்டுள்ளது. காளிங்கன் என்னும் பாம்பின் தலை மீது ஒரு காலை வைத்து ஒரு காலைத் தூக்கி நடனமிடும் நிலையில் இச்சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

## இராமர்

இராமர் படிமம் முன் மண்டபத்திலேயே காணப்படுகிறது. ஒரு கரத்தில் வில்லும் மற்றொரு கரத்தில் அம்பும் ஏந்தி நின்ற நிலையில் காட்சியளிக்கிறார்.

## அனுமன், சீதை

இராமர் உருவச் சிலை உள்ள அதே இடத்தில் அனுமன், சீதை உருவங்களும் காணப்படுகின்றன. இந் நான்கு சிலைகளும் ஒரே பீடத்தில் முன் மண்டபத்தில் வலது புறம் ஓரமாக வைக்கப்பட்டுள்ளன.

## காலம் - பெருமாள் கோயில்

விஜயராகவ பெருமாள் கோயில் கருவறையில் உள்ள கல்வெட்டுகளில் சக ஆண்டு 826 என்று குறிப்பிட்டுள்ள கல்வெட்டே தொன்மையானது. எனவே கி.பி.904-இல் இக்கோயில் இருந்தது தெரிய வருகிறது. இக் கருவறையில் இராட்டிர கூட மன்னன் கன்னர தேவன், சோழ மன்னர்களான ஆதித்த சோழன், இராஜராஜன், இராஜேந்திரன் ஆகியோரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கல்வெட்டுகளின் அடிப்படையில் இக் கோயில் கி.பி.904க்கு முந்தையது என்பதில் ஐயமில்லை. இங்குள்ள தாயார் கோயில் கல்வெட்டுகள் முறையற்று வைக்கப்பட்டுள்ளன.

கம்பவர்மன், முதலாம் பராந்தகன், பரகேசரி ஆகிய கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் பரகேசரியின் கல்வெட்டு தஞ்சை கொண்ட பரகேசரி விஜயாலயன் என்பது ஒரு சாராரின் கருத்தாகும். இக் கல்வெட்டுகள் வேறு எங்கிருந்தோ கொண்டு வந்து தாயார் சன்னதியில் வைத்துக் கட்டப்பட்டது எனலாம். கட்டடப் பகுதி பல்லவர் காலத்தியது அல்லது விஜயாலயன் காலத்தியதாகும். எனவே பல்லவர் காலத்தில் இக்கோயில் இருந்தது என்பது உறுதி. இப் பெருமாள் கோயில் முன் மண்டபத் தூண்களில் கன்னர தேவன், இராஜேந்திர சோழன் கல்வெட்டுகள் உள்ளன. முன் மண்டபம் முற்காலச் சோழர் காலத்திய தாக இருக்கலாம். ஆனால் தூண் கல்வெட்டுகளைக் கொண்டு இம் மண்டபத்தின் காலத்தை நிர்ணயிக்க இயலாது.

# சங்கர நாராயணர் கோயில்

இவ்வூரிலுள்ள பழம்பெரும் கோயில்களில் சங்கர நாரயணர் கோயிலும் ஒன்று.

சங்கர நாராயணர் கோயில் தற்போது முட்புதர்களால் சூழப்பட்டு காடாக காட்சி அளிக்கிறது. இருந்தாலும் இங்குள்ள கட்டட கற்கள் இவ்வூரின் உள்ள மற்ற கோயில்களில் இடம் பெயர்ந்து இருப்பதை காண்கிறோம்.

சங்கர நாராயணர் கற்சிலை தற்பொழுது திருக்காமீசுவரர் திருக்கோயிலில் நடராஜர் மண்டபத்தின் முன் சுவற்றில் சாய்த்து வைக்கப்பட்டுள்ளது.

இதே போல் நாராயணர் செப்புத் திருமேனியும் இங்குள்ள கருவறையில் வழிபாடுகள் இன்றி காணப்படுகிறது. மேலும் இக்கோயிலில் உள்ள பல கற்சிலைகள் லிங்கம் உட்பட சங்கார நாராயணர் கோயிலில் இருந்து எடுத்து வைக்கப்பட்டவையாகும்.

# கோயில்கள்

காப்பலூர் கிராமத்தில் 20க்கும் மேற்பட்ட கோயில்கள் காணப்படுகின்றன. இதனால் இவ்வூரை,

''காசி கோயிலும் காப்பலூர் கோயிலும்'' ஒன்று என்று இவ்வூர் மக்கள் பெருமையோடு கூறுகின்றனர்.

1. திருக்காமீசுவரர் கோயில்
2. பெருமாள் கோயில்
3. வீரபத்திரர் கோயில்
4. காளியம்மன் கோயில்
5. தர்மராச கோவில்
6. பிள்ளையார் கோயில்கள்
7. பூங்காவனத்தம்மன் கோயில்
8. முத்தாலம்மன் கோயில்
9. பஜனை கோயில்
10. அரிச்சந்திரன் கோயில்
11. தஞ்சியம்மன் கோயில்
12. வேடியப்பன் கோயில்
13. குள்ளம்மாள் கோயில்
14. பச்சையம்மாள் கோயில்
15. மாரியம்மன் கோயில்

16. செல்லியம்மன் கோயில்

17. முனியப்பன் கோயில்

18. வள்ளல் பிள்ளையார் கோயில்

19. கூத்தாண்டவர் கோயில்

19. சங்கர நாராயணர் கோயில்

20. குந்து தீர்க்கங்கரர் ஜினாலாயம்

இவ்வாறு இவ்வூரின் அமையப் பெற்ற 20 கோயில்களுக்கும் அந்தந்த இறைவனுக்குரிய கோயில் அமைக்கப்பட்டு வழிபாடு செய்து வருகின்றனர்.

ஆண்டு முழுவதும் இவ்வூரில் உ ள்ள ஆலயங்களுக்கு சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. குறிப்பாக திருக்காமீசுவரர் கோயில், பெருமாள் கோயில் ஆகிய இரண்டு கோயில்களிலும் தினசரி வழிபாடுகள் நடைபெறுகின்றன.

திருக்காமீசுவரர் கோயிலில் இரண்டு வேளை பூசைகள் பூசாரிகளால் நடத்தப்படுகிறது. பெருமாள் கோயிலில் ஒரு வேளை பூசை அனுசரிக்கப்படுகிறது.

மற்ற கோயில்களில் அவ்வவ் இறைவனுக்குரிய நாட்களில் சிறப்பு வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டு இறைவன் திருவீதி உலா வருகின்ற பழக்கம் இன்றும் காணப்படுவது பெருமைக்குரிய ஒன்றாகும்.

மேலும் இவ்வூரில் பிராமணர்கள் இல்லை என்றாலும் பக்கத்து ஊரில் இருந்து வந்து தினசரி பூஜைகள் செய்து வருவது குறிப்பிடத் தக்கது.

## பஜனை கோயில்

இன்றைய நிலையில் கோயில் இடம் மட்டும் உள்ளது. சிலைகளோ, பாழடைந்த சுவர்களோ காணப்படவில்லை. கோயில் முன் முற்றும் அழிந்த நிலையில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது.

## தஞ்சியம்மன் கோயில்

இக் கோயில் இவ்வூரின் மேற்கில் அமையப் பெற்ற தஞ்சியம் மலையில் சிறிய கட்டட அமைப்பினைப் பெற்று காணப்படுகிறது. தஞ்சியம் மலையில் அமையப் பெற்றதனால் இக் கோயில் இப்பெயர் பெற்றது.

## விநாயகர் கோயில் (அண்ணா நகர்)

இவ்வூரில் இருந்து பிரிந்து சென்ற சில குடும்பத்தினர் குடியேறிய பகுதி அண்ணா நகர்(எ)மணியம் புத்தூர் ஆகும். இங்குள்ள இக் கோயில் சிறிய கருவறையுடன் கூடிய எளிய அமைப்பினைப் பெற்றுள்ளது. காலையும், மாலையும் தினசரி வழிபாடுகள் நடைபெறுகின்றன.

மொத்தம் இவ்வூரில் நான்கு பிள்ளையார் கோயில்கள் உள்ளன.

## வள்ளல் பிள்ளையார்

இவ்வூரின் தர்மராஜர் கோயில் அருகில் அமையப் பெற்ற இக்கோயில் வள்ளல் பிள்ளையார் என அழைக்கப்படுகிறது. எளிய அமைப்புடன் ஒரு கருவறையும், மண்டபமும் காணப்படுகிறது. தை மாதம் பெரும் பொங்கல் அன்று திருவிழா நடத்தப்படுகிறது.

## முனியப்பன் கோவில்

இவ்வூரின் கோடியில் பனைமேடு என்ற பகுதியில் கட்டடங்கள் இல்லாமல் முனியப்பன் கோயில் காணப்படுகின்றது. பனை மரங்கள் அதிகமாக உள்ளதால் இப்பெயர் பெற்றது. திருவிழா தனியாக இல்லை என்றாலும் குழந்தை பிறந்த 3 ஆம் மாதம் இக்கோயிலில் வழிபாடு மேற்கொள்கின்றனர்.

## கூத்தாண்டவர் கோயில்

கூத்தாண்டவர் கோயில் சிறிய கட்டட அமைப்பினை பெற்று எளிமையாக காணப்படுகிறது.

## பூங்காவனத்தம்மன்

இவ்வாலயத்திற்கு மாசி மாதம் சிவராத்திரி அன்று சுண்டல் படையலுடன் வழிபாடு நடை பெறுகிறது. அன்றிரவே 'மயானக் கொள்ளை'' என்ற நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

## முத்தாலம்மன்

ஆடி மாதம் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் இக்கோயிலில் வழிபாடு நடத்தப்பட்டு அம்மன் அலங்கரிக்கப்பட்டு இரவில் ஊர் வலம் நடைபெறுகிறது.

## வேடியப்பன்

ஒவ்வோர் ஆண்டும் ஆடி மாதம் ஊர் மக்கள் அனைவரும் சென்று அம்மனுக்கு ஊரணி பொங்கல் வைத்து படையலுடன் சிறப்பு பூசை செய்கின்றனர்.

## குள்ளம்மாள்

ஆடி மாதம் முதல் வாரத்தில் இவ்வாலயத்தில் சிறப்பு பூசை மட்டும் நடைபெறுகிறது.

## பச்சையம்மாள்

இக்கோயில் இவ்வூர் மக்கள் ஆடி மாதம் முதல் திங்கள் கிழமையன்று பொங்கல் வைத்து அம்மனை வழிபடுகின்றனர்.

## மாரியம்மன்

இவ்வாலயத்திற்கு என்று தனித் திருவிழா நடைபெறுவது இல்லை. ஆனால் ஊரில் எப்பொழுதாவது வாந்தி, பேதி, ஆடு, மாடுகளுக்கு நோய் வந்தால் ஒரு நாள் காப்பு கட்டி மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கரகம் ஊர்வலமாகக் கொண்டு வந்து சிறப்பு வழிபாடு செய்கின்றனர்.

## வீரபத்திரர்

காணும் பொங்கல் அன்று வீரபத்திரர் அலங்காரம் செய்யப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகிறது. இதோடு முத்தாலம்மன், செல்லியம்மன், திரௌபதி, அர்ச்சுனன் ஆகிய சிலைகளும் அலங்காரம் செய்யப்பட்டு ஊர்வலமாக அழைத்து செல்லப்படுகிறது. இதே போன்று கார்த்திகை மாதம் தீபம் அன்று தீபதரிசனம் நடைபெறுகிறது.

# கற்சிலைகளும் செப்புச் சிலைகளும்

## பெருமாள்

சுமார் 62 செ.மீ நீளமுள்ள இக்கற்சிலை மேற்கைகளில் சங்கும் சக்கரமும் ஏந்திக் கீரிட மகுடம் தரித்து கீழ்க்கைகளில் வலக்கரம் அபய முத்திரையிலும் இடக்கரம் ஊருஹஸ்தத்திலும் காணப்படுகின்றன. மார்பு நூலுடன், இடைக் கட்டு அலங்கரிக்கின்றது. நீண்ட வரி வரியான உடை. கால்களில் காப்பு அணியப்பட்டுள்ளன.

## தட்சிணாமூர்த்தி

ஆலமர் செல்வர் என்றழைக்கக்கூடிய தட்சிணாமூர்த்தி சுகாசன நிலையில் ஒரு காலை மடக்கி மறுகாலைத் தொங்க விட்டு அமர்ந்துள்ளார்.

தலையில் ஜடாமகுடம் அணிந்து காதுகளில் பத்ரகுண்டலம் இருக்க கழுத்தில் மணிகள் காணப்படுகின்றன. மார்பில் புரிநூல், இடுப்புக்கு கீழே இடைக் கச்சை ஆகிய காணப்படுகின்றன.

## நரசிங்கர்

சுகாசனத்தில் வீற்றுள்ள இச்சிற்பம் தலையில் கீரிட மகுடத்துடனும் காதுகளில் பத்ர குண்டலமும் நான்கு கைகளுடன் காணப்படுகிறது. ஒரு கை அபய முத்திரையாகவும் மறு கை லட்சுமியை அணைத்த வண்ணம் காட்சி தருகிறார். வலக்கையில் சக்கரமும் இடக்கையில் சங்கும் காணப்படுகின்றன.

அருகில் லட்சுமி கரண்ட மகுடம் அணிந்து கழுத்திலும், காதுகளிலும் அணிகலன்கள் அழகு சேர்க்கக் கால்கள் இரண்டையும் தொங்கவிட்ட நிலையில் நீண்ட உடையுடன், காட்சி தருகிறார்.

## இராமானுஜ ஆழ்வார்

தலையில் கீரிட மகுடம் அணிந்து காதுகளில் பத்ர குண்டலமும் கழுத்தில் அணிகளுடனும் நின்ற நிலையில் காணப்படுகின்றார். அஞ்சல் முத்திரை காணப்படுகிறது.

இடுப்பில் இருந்து வரிவரியான நீண்ட உடை காணப்படுகிறது. வலக்கரம் நீண்ட கொம்பு பிடித்தவாறு காணப்படுகிறார் இதன் உயரம் 140 செ.மீ.

## ஆண்டாள்

பெருமாள் கோயிலின் வடபகுதியில் தனியாக அமையப் பெற்ற தனி கோயிலில் மார்புக் கச்சை இல்லாமல் இடக் கச்சையோடு காணப்படுகிறது. வலக்கரம் லோல முத்திரையும் இடக்கரத்தில் கையில் அரும்பும் காணப்படுகின்றது. நின்ற நிலையில் இக்கற்சிலையின் உயரம் 110 செ.மீ.

## பைரவர்

சுமார் 78 செ.மீ உயரமுடைய இச் சிலையின் தலையில் ஜடாபாரம், காதுகளில் பத்ர குண்டலம், கழுத்தில் அணிகலன்கள் மார்பில் புரிநூல் ஆகியன காணப்படுகின்றன. வலக்கரம் கத்திரி முத்திரையுடனும், இடக்கரம் வரத முத்திரையுடனும் காட்சி அளிக்கிறது.

## காமாட்சி அம்மன்

பத்மாசன முறையில் அமர்ந்திருக்கும் இவர் தலையில் கரண்ட மகுடமும் கழுத்தில் அணிகலன்களும் கைகளில் வளையல்களும் அலங்கரிக்கின்றன. நான்கு கைகள் பெற்றுள்ள இவரின் வலக்கரம் அபய முத்திரையோடும் இடக்கரம் வரத முத்திரை யோடும் ஏனைய இரு கைகளில் அரும்புகளோடும் காணப்படுகிறது. இதன் உயரம் 46 செ.மீ.

## விநாயகர்

நின்ற நிலையில் காணப்படும் இச்சிலை சுமார் 60 செ.மீ. உயரமுடையது. இடம்புரி விநாயகராகக் காட்சி தரும் இவரது வலக்கரம் சின் முத்திரையோடும் இடக்கரத்தில் மோகதத்துடன் காட்சியளிக்கின்றன. தற்பொழுது இச்சிலை வழிபாடு இல்லாமல் கோயிலின் ஒரு மூலையில் வைக்கப்பட்டுள்ளது.

## சங்கர நாராயணன்

இச்சிலை 155 செ.மீ உயரமுடையதாகும். தலையில் கீரிட மகுடமும், காதுகளில் பத்ர குண்டலமும், கழுத்தில் அணிகலன்களுடன் நின்ற நிலையில் காணப்படுகிறார். இச்சிலையின் மார்பில் புரிநூல் காணப்படுகிறது. கீழிரு கரங்களில் வலக்கரம் அபய முத்திரையோடும், இடக்கரம் ஊரு ஹஸ்தத்திலும் உள்ளன. மேலிரு கைகளில் முறையே சங்கு, சக்கரம் காணப்படுகின்றன. கையில் வளையல்களும், கால்களில் காப்புகளும் இடுப்பில் இடுப்புக் கச்சையும் அலங்கரிக்கின்றன.

இப்பொழுது சங்கர நாராயணன் கோயில் முற்றும் பாழடைந்து இடம் தெரியாமல் உள்ளதால் இச் சிலை திருக்காமீசுவரர் கோயிலின் நவக்கிரங்களுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது.

### விநாயகர்

பத்ம பீடத்தில் நின்ற விநாயகர், சுமார் ஒன்றரை அடி உயரமுள்ள கீர்த்தி முக திருவாசி பின் வல இடக்கரங்களில் பரசு, பாசம் கொண்டும், முன் வல இடக்கரங்களில் காட்டப்பட்டுள்ளது. ஒடிந்த தந்தமும், மோதகமும் பெற்றுள்ளார்.

### சண்டிகேஸ்வரர்

சுமார் 52 செ.மீ உயரமுடைய இவ்வுருவம் பத்ம பீடத்தில் நின்ற நிலையில் உள்ளது. காதுகளில் பத்ர குண்டலமும் கழுத்தில் மணியாரமும் உள்ளன. வலது கரம் மழு ஏந்தி, இடது கரம் வரத முத்திரையுடன் காணப்படுகிறது.

### பெரிய நாயகர்

சுமார் 45 செ.மீ நீளமுடைய இவ்வுருவச் சிலை பத்ம பீடத்தில் நின்ற நிலையில் காணப்படுகிறது. மார்பில் பலவித ஆரங்கள், இடையில் மணி பதித்த ஆரம், பாதம் வரை ஆடை காட்டப்பட்டுள்ளது.

### உண்ணாமுலை

பத்ம பீடத்தில் நின்ற நிலையில் இவ்வுருவம் வலக்கரம் தாமரை மலரைப் பிடித்துக் கொண்டும், இடக்கரம் தொங்கும் கரமாகவும் காட்டப்பட்டுள்ளது. இதன் உயரம் 37 செ.மீ. ஆகும்.

### முருகன், வள்ளி, தெய்வயானை

சுமார் இரண்டடி உயரமுள்ள முருகன் மயில்மீது அமர்ந்து காட்சி தருகிறார். இடது புறம் தெய்வயானையும், வலதுபுறம் வள்ளியும் தனித் தனியே நிற்கின்றனர். பன்னிரு கரங்களில் வலது கரங்களில் சக்தி, அம்பு, கத்தி, சக்கரம், பாசம் அபய முத்திரைகளைக் கொண்டும், இடது கரங்களில் வஜ்ரம், வில், கேடயம், சேவல் முதலியன கொண்டும் உள்ளார். ஆறாவது கரம் வரதமாக உள்ளது. வள்ளி, தெய்வயானை இருவரின் இரண்டு கைகளில் ஒன்று தொங்கும் கரமாகவும், மற்றொன்றில் மலரை ஏந்தியும் உள்ளன.

### சண்டிகேசுவரர்

அஞ்சலித்த நிலையில் நின்ற கோலத்தில் பத்ர குண்டலங்களுடன், ஜடாமகுடம் விளங்க அவருக்குரிய தனி மண்டபத்தில் காணப்படுகிறார். இடக்கரம் ஊரு ஹஸ்த முத்திரையுடனும் வலக்கரம் உள்ளன. இடுப்புக்குக் கீழே இடைக் கச்சையும் மழுவுடனும் மார்பில் புரிநூலும் காணப்படுகின்றன. இதன் உயரம் 110 செ.மீ. ஆகும்.

## பிரம்மா

நான்முகனான பிரம்மாவின் சிலை கருவறையின் வடக்குச் சுவரில் காணப்படுகிறது. வலக்கரம் அபய முத்திரையிலும் இடக்கரம் ஊரு ஹஸ்தத்திலும் காணப்படுகிறது. தலையில் கீரிட மகுடம் அலங்கரிக்க, மார்பில் புரிநூல் காணப்படுகிறது. இடுப்புக்கு கீழே இடைக் கச்சையும் கால்களில் காப்புகளும் அலங்கரிக்கின்றன. இதன் உயரம் சுமார் 61 செ.மீ. ஆகும்.

## துர்கை

பீடத்தின் மீது நின்ற நிலையில் காணப்படும் இச் சிற்பத்தில் தலையில் கரண்ட மகுடம் காதுகளில் பத்ரகுண்டலம் கைகளில் சங்கும், சக்கரமும் காணப்படுகிறது. மார்பில் மார்பு கச்சையும் இடுப்பில் இடுப்புக் கச்சையும் அணி செய்கின்றன. நீண்ட வரிவரியான உடை அலங்கரிக்கின்றது. கால்களில் காப்பு அணிந்து காணப்படுகிறது. இதன் உயரம் 64 செ.மீ.

## கருடாழ்வார்

பெருமாள் கோயிலின் முன்புறம் உள்ள அவருக்குரிய மண்டபத்தின் கருவறை நோக்கிய வண்ணம் அமைந்துள்ளது. நின்ற கோலத்தில் உள்ளே இவ்வுருவச் சிலை இரு கைகள் வணங்கிய நிலையில் தலையில் கீரிட மகுடம் அணிந்து காதுகளில் பத்ர குண்டலம் அணிந்து காட்சி அளிக்கிறது. கழுத்தணிகள் சிலைக்கு மேலும் அழகு சேர்க்கிறது. மணிகள் கால்வரை காணப்படுகிறது.

இதன் உயரம் சுமார் 120 செ.மீ

## சீனிவாச பெருமாள்

நின்ற கோலத்தில் உள்ள இவ்வுருவச் சிலை தலையில் கீரிட மகுடம் தரித்து, காதுகள், கழுத்தில் அணிகலன்கள் அழகு சேர்க்க வலக்கரம் அபய முத்திரையோடும் இடக்கரம் நீண்ட தண்டு ஊன்றிய நிலையிலும் காட்சி தருகிறது. இரு கைகளில் முறையே சங்கும், சக்கரமும் காணப்படுகின்றன. இதன் உயரம் சுமார் 110 செ.மீ. ராதா, ருக்மிணி சுமார் 90 செ.மீ. உயரமுடையவை.

இவர் அருகிலேயே தேவியர் இருவரும் உள்ளனர். இரு கரங்களில் ஒரு கரம் (தொங்கும் கரம்) டோல ஹஸ்தத்திலும் மறுகரத்தில் அரும்பு பிடித்த வண்ணமும் திரிபங்க நிலையில் காட்சி தருகின்றனர். காதுகள், கைகளில், அணிகள் அழகு சேர்க்கின்றன. வரிவரியான நீண்ட உடை காணப்படுகிறது.

### காளிங்க நர்த்தனார்

தலையில் கீரிட மகுடம் அலங்கரிக்க ஒரு கால் பாம்பின் தலை மீதும் மற்றொரு கால் சற்று உயர்த்தி நடனமாடும் நிலையில் காணப்படுகிறது. வலக்கரம் அபய முத்திரையோடும் இடக்கரம் பாம்பின் வாலை கையில் பிடித்தவாறு நடனமிடும் நிலையிலுள்ளது. இதனருகிலேயே இதே உருவம் பாம்பு இன்றி காட்டப்பட்டுள்ளது. இச் சிலைகள் முறையே 110 செ.மீ. மற்றும் 90 செ.மீ. உயரம் கொண்டவையாக உள்ளன. இப்படிமங்களின் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டாகும்.

### விஜயராகவர்

நின்ற நிலையில் காணப்படுகின்ற இப்படிமம் தலையில் கீரிட மகுடம் அணிந்து கைகளில் முறையே சங்கு, சக்கரமும் இடக்கை சிம்மஹர்ண முத்திரையும் வலக்கை அபய முத்திரையும் ஏற்றும் மார்பில் புரிநூலும், வரிவரியான நீண்ட உடையும் காணப்படுகின்றன.

உடன் ஸ்ரீதேவி, பூதேவி உருவங்கள் காணப்படுகின்றன. தலையில் கரண்ட மகுடம் அணிந்து கைகள் முறையே டோலகரம் மற்றும் தோள் முத்திரையும் பெற்றுள்ளன. இவ்விரு வருக்கும் மார்புக் கச்சை காணப்படுகிறது. வரிவரியான நீண்ட உடை காணப்படுகிறது.

### இராமர்

இப்படிமம் தலையில் கீரிட மகுடம் அணிந்து வலக்கரம் கத்தரி முகம் பெற்று கையில் அம்பும் மற்றொரு கையில் வில்லும் காணப்படுகிறது. கழுத்து, புஜம், கைகளில் அணிகலன்கள் அலங்கரிக்கின்றன. விரல்களில் மோதிரங்கள் அணிசெய்கின்றன.

### லட்சுமணன்

நின்ற கோலத்தில் உள்ள இவரும் வலக்கரம் கத்திரி முத்திரையுடன் அம்பும், வில்லும் காணப்படுகிறது. மார்பு, இடுப்பு, கீழே உடைகள் காணப்படுகின்றன. தலையில் கிரீட மகுடம் காணப்படுகிறது.

### சீதை

கரண்ட மகுடத்துடன் காணப்படும் இச்சிலை வலக்கரம் கடகண முத்திரையும் இடக்கரம் டோல கரமாகவும், தோள்களிலும் கழுத்திலும் அணிகலன்களுடன் மார்பு கச்சை இல்லாமலும் காணப்படுகிறது. இடைக் கச்சையில் இருந்து நீண்ட வரிவரியான ஆடைகள் காணப்படுகின்றது.

### அனுமன்

இராமர், லட்சுமணன், சீதை, இதனருகிலேயே அனுமன் சிலை காணப்படுகிறது. வலக்கரம் தாமரை ஹஸ்தம் பெற்றும் இடக்கரம் விஸ்மய முத்திரை பெற்றும் மார்பில்

புரிநூலும், கழுத்தில் அணிகலன்களும் அணி செய்கின்றன. இந்நான்கு சிலைகளை சுற்றிலும் வட்டவடிவமான பிரபை கலைநுணுக்கத்துடன் காணப்படுகிறது.

### விஷ்வக் சேனர்:

இடது காலை மடக்கி வலது காலை தொங்க விட்டு, சுகாசன நிலையில் அமர்ந்துள்ளார். நான்கு கைகளில் மேலிரு கைகளில் சங்கும் சக்கரமும் உள்ளன. கீழ் இடக்கரம் அபய முத்திரையோடும் வலக்கரம் சின் முத்திரையோடும் காணப்படுகிறது. இதன் உயரம். 90 செ.மீ

### கௌரி தாயார்

பெருமாள் கோயிலின் தனியாக அமையப் பெற்ற அம்மன் சன்னதியில் கௌரி தாயார் நின்ற நிலையில் உள்ளார். தலையில் கரண்ட மகுடம் அணிந்து வலக்கரம் அபய முத்திரையோடும் இடக்கை தொடை மீது ஊன்றிய நிலையிலும் மேலிடு கைகளில் முறையே சங்கும், சக்கரமும் காணப்படுகின்றன. மார்பு கச்சை இல்லாமல், இடைக் கச்சை காணப்படுகிறது.

### தும்பிக்கையாழ்வார்

கால்களை மடக்கி அமர்ந்த நிலையில் உள்ள இச்சிலையின் வலக்கரம் வளைந்து வந்து இடக்கரம் கையில் சேர்தல். மார்பில் புரிநூல் காணப்படுகிறது. தலையில் கீரிடமகுடம் கரண்ட அலங்கரித்து கைகளில் காப்பு காணப்படுகிறது.

### மரகதவல்லி தாயார்

பத்மாசனத்தில் வீற்றிருக்கும் இவர் கைகள் முறையே அபய முத்திரையும் வரத முத்திரையும் பெற்றுள்ளது. தலையில் கரண்ட மகுடம் அலங்கரிக்க கையில் அரும்பு, ஒன்றுடன் காணப்படுகிறது. பெருமாள் கோயிலின் அம்மன சன்னதியில் கருவறை அருகே இச்சிலை காணப்படுகிறது. வழிபாடுகள் இன்றி வைக்கப்பட்டுள்ளது.

# திருவிழாக்கள்

## வசந்தத் திருவிழா

திருக்காமீஸ்வரர் திருக்கோயிலில் ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் வசந்த திருவிழா பத்து நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் பத்து நாட்களுக்கும் இறைவனுக்கு படையல் பொருட்கள் வைத்து சிறப்பு வழிபாடு செய்யப்பட்டு கோயிலைச் சுற்றி இறைவன் திருவீதி உலா நடைபெறுகிறது.

முதல் நான்கு நாட்களுக்கு இறைவனுக்கு இரண்டு ஆடைகளால் அலங்காரம் செய்யப்படுகிறது. பிறகு ஐந்தாம் நாள் திருவிழாவில் ஒரு ஆடை களையப்பட்டு வாண வேடிக்கையுடன் திருவீதி உலா நடைபெறுகிறது. ஆறாவது, ஏழாவது நாளில் படையல் அபிஷேகம் நடைபெறுகிறது. எட்டாவது, ஒன்பதாவது நாளில் படையல். அபிஷேகம் ஆகியவை மட்டும் நடைபெறுகிறது.

இறுதி நாளான பத்தாவது நாளில் இறைவன் அலங்கரிக்கப்பட்டு ஊர் முழுவதும் திருவீதி உலா நடைபெறுகிறது. இறுதியில் ஊர் எல்லையில் உள்ள தாமரைக் குளம் சென்று அடைகிறது.

பத்துநாள் நடைபெறும் இக்கோயில் திருவிழாவினை ஊரிலுள்ள ஒவ்வொரு பிரிவினரும் ஏற்று நடத்துகின்றனர்.

முதல் நாள் - வீராச்சுடைய வகையறா

இரண்டாம் நாள் - ஆசாரிகள்(இரும்பு)

மூன்றாம் நாள் - பரமாத்து உடைய வகையறா

நான்காம் நாள் - செட்டியார்கள்

ஐந்தாம் நாள் - நீர் பூசி நயினார்கள் (பூணூல் அணியாதவர்கள்)

ஆறாவது நாள் - நன்னி வீராச்சி வகையறா

ஏழாவது நாள் - நாயுடுகள் (வளையல் வியாபாரம் செய்பவர்கள்)

எட்டாவது நாள் -

1. சின்ன உடையார்

2. முனியப்ப உடையார்

3. குட்ட பையன் உடையார் ஆகிய மூன்று வகையறா

ஒன்பதாவது நாள் - குப்பத்தார் உடைய நாயக்கர்கள்

பத்தாவது நாள் - கணக்கர்கள்.

**சீதா கல்யாணம்**

ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதம் பௌர்ணமி அன்று பெருமாள் கோயிலில் இத்திருவிழா நடைபெறுகிறது. பௌர்ணமி இரவில் நடைபெறுகின்ற இந்த திருவிழாவில் இராமர் மற்றும் சீதா திருமணக் கோலத்தில் அலங்காரம் செய்யப்பட்டு இரவு நேரத்தில் இத்திருமண நிகழ்ச்சியை நடத்துகின்றனர். இத்திருமண நிகழ்ச்சியில் இவ்வூரைச் சுற்றியுள்ள ஊர் மக்கள் அனைவரும் அழைக்கப்பட்டு பஜனைப் பாடல்கள் பாடுகின்றனர். அந்நாட்களில் மூன்று வேளையும் உணவளிக்கப்படுகிறது.

**பஜனைப் பாடல்**

*வள்ளல் இராமலிங்கம் அருந்தங்கமடி*
*வடலூர் வறுமைபிணி அகற்றும் தங்கமடி*
*அள்ளக் குறையா அருட்பெருஞ்சோதியடி*
*அருட்பா அமுதை தேன்ஊட்டும் நீதியடி*
*நாராயணன் ஜோதி மடம் அமர்ந்தாரே*
*அருட்பா ஞானசபை கட்டிவைத்தாரே*
*வள்ளல் இராமலிங்கம் அருந்தங்கமடி*

போன்ற பஜனை பாடல்களுடன் இக்கல்யாண நிகழ்ச்சி ஊர்வலமாக அழைத்துச் செல்லப் படுகிறது. இது இவ்வூரின் முக்கிய நிகழ்ச்சியாக கருதப்படுகிறது. இத் திருவிழா முடிந்த வுடன், இவ்வூர் மக்கள் பெண் பார்க்கும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**விநாயகர் சதுர்த்தி**

இவ்வூரில் அமையப் பெற்ற வெள்ளாளத் தெரு, வடக்குத் தெரு, ஆசாரி தெரு ஆகிய மூன்று தெருவிலும் விநாயகருக்கெனத் தனித்தனி ஆலயங்கள் உள்ளன. விநாயகர் சதுர்த்தி தினத்தன்று சுண்டல், கொழுகட்டையுடன் பூஜை செய்கின்றனர். அபிஷேகம் முடிந்தவுடன் விநாயகர் ஊர்வலமாக அழைத்து செல்லப்படுகிறார்.

## பஜனை கோயில்

புரட்டாசி மாதம் முழுவதும் பஜனைப் பாடல்கள் பாடப்படுகின்றன. மற்ற மாதங்களில் ஒவ்வொரு சனிக்கிழமையும் பஜனைப் பாடல்கள் பாடப்படுகின்றன. தற்போது கோயில் பழுதடைந்து காணப்படுகிறது. இக்கோயிலின் எதிரே மிகவும் சிதிலமடைந்த நிலையில் கல்வெட்டொன்று காணப்படுகிறது.

## தர்மராஜா கோவில்

இக்கோயிலில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் ஏதாவது ஒரு மாதத்தில் தீமிதித் திருவிழா நடைபெறுகிறது.

## சஷ்டி விரதம்

ஐப்பசி மாதம் ஏழு நாட்கள் சஷ்டித் திருவிழா நடைபெறுகிறது. இந்நாளில் சுப்ரமணியருக்கு அலங்காரம் செய்யப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்கின்றனர்.

## நவராத்திரி திருவிழா

ஒவ்வோர் ஆண்டும் புரட்டாசி மாதம் 9 நாட்கள் இத்திருவிழா நடைபெறுகிறது.

பெருமாள் கோயிலில் பஜனை பாடி அபிஷேகம் நடைபெறுகிறது. பஜனைப் பாடி ஆடுகின்ற இந்நிகழ்ச்சிக்கு பிருந்தாவனம் ஆடல் நிகழ்ச்சி என்றழைக்கின்றனர்.

## பங்குனி உத்திரம்

இத்திருவிழா பங்குனி மாதம் மிகச் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. அண்ணாமலையாரும், உண்ணாமுலையாரும் தனித் தனியே அலங்காரம் செய்யப்பட்டுத் திருமணக் கோலத்தில் திருவீதி உலா செய்கின்றனர்.

இவ்வாறு நடைபெறுகின்ற திருமண நிகழ்ச்சியே இவ்வூரின் முதல் திருமண நிகழ்ச்சியாக மக்கள் கருதுகின்றனர். இதன் பின்னரே இவ்வூர் மக்கள் அவரவர் இல்லத் திருமண நிகழ்ச்சிக்கான வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

## ஆனித் திருமஞ்சனம்

நடராசருக்காகச் செய்யப்படுகின்ற இத்திருவிழா, ஆனி, மற்றும் மார்கழி மாதங்களில் நடைபெறுகின்றன. ஆனி மாதம் 4 நாட்களும் மார்கழி மாதம் ஒரு நாளும் எடுக்கப்படுகிறது.

இத்திருவிழாவின்போது நடராஜர் உருவம் அலங்கரிக்கப்பட்டு திருவீதி உலா எடுக்கின்றனர்.

## அன்ன அபிஷேகம்

ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதம் பௌர்ணமி அன்று இவ்விழா எடுக்கப்படுகிறது. இந்நாளில் திருக்காமீசுவரர் ஆலயத்தில் உள்ள லிங்கம் முழுவதும் சாதம்(சோறு) பூசப்பட்டு படையல் பொருட்களுடன் பூஜை சிறப்பாக நடைபெறுகிறது. பூஜை முடிந்தவுடன் லிங்கத்தில் பூசப்பட்ட சாதம் ஊழியர் பங்கு. பொதுமக்கள் பங்கு என பிரிக்கப்பட்டு பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

## குந்து தீர்த்தங்கரர் ஜினாலயம்

இவ்வூரில் இருபதுக்கும் மேற்பட்ட சமண சமயக் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இவர்களுக்கென்று சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட ஜினலாயம் ஒன்று இவ்வூரில் அமைந்துள்ளது. இவ்வூரின் சமண சமயத்தைச் சார்ந்த ஒருவர் அர்ச்சகராக இருந்து தினசரி பூஜை செய்து வருகிறார்.

சித்திரை அமாவசைக்குப் பிறகு வருகின்ற பிரதமை திதி அன்று சிறப்பான பூஜை நடைபெறுகிறது. 24வது தீர்த்தங்கரருக்கு (வர்த்தமானர்) ஒவ்வோர் ஆண்டும் தீபாவளி அன்றும் சிறப்பு வழிபாடு செய்கின்றனர்.

## ஆவணி அவிட்டம்

ஆவணி அவிட்டம் அன்று பூஜை முடிந்த பிறகு பூணூல் புதுப்பித்தல் விழா நடைபெறுகிறது. இதில் திருமணமானவர்களுக்கு ஒன்பது இழையும், திருமண மாகாதவர்களுக்கு மூன்று இழை கொண்ட பூணூல் அணிவிக்கின்றனர். ஆவணி அவிட்டம் அடுத்த பௌர்ணமி அன்று தீர்த்தங்கரர் நோன்பு எடுக்கிறார்கள்.

ரிஷப தீர்த்தங்கரருக்கு சித்திரை மாதம் அட்சய திதி அன்று ஆகாரதானம் குடுத்தல் என்ற நிகழ்ச்சியை நடத்துகின்றனர். மாகாவீர் ஜெயந்தி அன்று பால் அபிஷேகம் செய்கின்றனர்.

# செப்பேடுகளில் காப்பலூர்

வடஆர்க்காடு மாவட்டம் புல்லூர் கிராமத்தில் உள்ள ஒரு சிறிய விஷ்ணு கோயில் பாழடைந்துள்ளது. இக்கோயில் அர்த்த மண்டபத்தை 1939-மே மாதம் பிரித்தபோது பூமிக்கடியில் இருந்து செப்பேடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இதனுடன் விஷ்ணு, தேவியர்கள், சக்கரத்தாழ்வார் இரண்டு சங்குகள் ஆகியன கிடைத்தன. இப்படிமங்களில் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். தற்போது இச்செப்பேடு கல்கத்தா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

செப்புப் பட்டயம் 9 ஏடுகளைக் கொண்டுள்ளது. இச்சாசனம் மட்டும் 139 வரிகளைக் கொண்டது. இதில் சமஸ்கிருதம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. ஒன்று முதல் பதினேழு வரிகளும் மற்றும் 132 - 135 வரை ஆகிய வரிகளும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது. 17ன் இறுதி வரியிலிருந்து 132 வரை மற்றும் 136 - 139 வரை தமிழ் மொழியில் எழுதப்பெற்றுள்ளது. கிரந்த எழுத்துகளைக் கொண்டு சமஸ்கிருத மொழி எழுதப்பட்டுள்ளது. செப்பேட்டின் ஆறாம் ஏட்டின் முன்புறம் உள்ள 80, 81, 82 வரிகளில் காமப்புல்லூர் (காப்பலூர்) ஊரைப் பற்றியக் குறிப்பு காணப்படுகிறது.

**செப்பேட்டின் வாசகம் (80–82 வரிகள்)**

ஸாங்க்ரு

த்யாயன கோத்ரத்து வ்ரவசன விஷகோத்ர வசலூர் வத்தவன்

பூதி ஶர்மனும் - ஆவிஷகோத்ரத்தவம்ப

கூத்ரத்து இறைக்கூர் வத்தவன் குமார ஶர்மனும் - காமப்புல்லூர்ப்

பெருமஞ்சி காபாசன் காட்டி குறிப்ப

வநாகன் பம்கொன்று - காமப்புல்லூர்க் கொயிலான் நீலகண்டன் பங்கொன்று

## தானம் பெற்ற காப்பலூர் அந்தணர்கள்

ஆவிஷ்டி ஆவத்தம்ப காமப்புல்லூர் பெருமஞ்சி காபாசன் காட்டி குறிப்பவநாகன்

ஆவிஷ்டி ஆவத்தம்ப காமப்புல்லூர் கோயிலான் நீலகண்டன்

பல்குன்றக் கோட்டத்தில் கீழ்வேணாட்டில் சேயாறு நதியின் தென்கரையில் நெல்லி, புல்லூர், தக்காளி, குடியூர் என்ற நான்கு கிராமங்களையும் ஒன்று சேர்த்து ஒரு கிராமமாக, ''நயதீரமங்கலம்'' என்று தன் பெயருடையதாகச் செய்து அவரவர் வம்ச பரம்பரையில் முறையாக வந்தவர்களும், சுத்தமான குலம், நடத்தை, வித்தை இவைகளை உடையவர்களும் இருபிறப்பாளர்களுமான பட்டாராகர்கள் நூற்றறெட்டுப் பேர்களுக்கு நீர் வார்த்து கொடுத்தான்.

## தமிழ்ப் பகுதி

கோவிசய நந்திவர்மனுடைய ஆட்சியின் 35 ஆம் ஆண்டு அவநிசந்திர இளவரசன் விண்ணபத்தால் பிரம்மாதிராஜன் ஆணத்தியாகப் பல்குன்றக் கோட்டத்துக் கீழ்வேணாட்டு நெல்லியும், புல்லூரும், குடியூரும், மணலைருள நாட்டுத் தக்கானுமான நான்கு கிராமங்களை கோவும், பொறியும் தீர்த்து முன் பெற்றாரை மாற்றி, குடி நீக்கி நயதீரமங்கலம் என்ற பெயரால் நல்கூர் நற்பார்ப்பார் நூற்றெண்மருக்கு வழங்கப்பெற்ற செய்தி தமிழ் பகுதியிலேயே பொறிக்கப்பட்டுள்ளது. நியமனம் செய்து நல்ல குணம், பிறப்பு, நடத்தை, வித்தை ஆகியவை கொண்ட பிராமணர்கள் நூற்றெண்மருக்குத் தன்னுடைய மந்திரியான நாகசர்மப் பிரம்மாதிராஜனை ஆணத்தியாக நியமித்து நீர்வார்த்து தானம் செய்தான் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது. பல்லவர் செப்பேடுகள் முப்பது நூலில் இருந்து.

# கல்வெட்டுச் செய்திகள்

இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1988–89ஆம் ஆண்டின் வ.எண். 243 முதல் 289 வரை ஆக மொத்தம் 46 கல்வெட்டுகள் இவ்வூரில் உள்ள இரு கோயில்களில் காணப்படுகின்றன. இவை தவிர 'சம்புவராயர் வரலாறு' என்னும் நூலில் ஒரு கல்வெட்டு வெளியிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சோழர் கல்வெட்டுகள் | - | 35 |
| பல்லவர் கல்வெட்டுகள் | - | 2 |
| இராட்டிரகூடர் கல்வெட்டுகள் | - | 3 |
| விஜயநகரர் கல்வெட்டுகள் | - | 6 |
| சம்புவராயர் கல்வெட்டுகள் | - | 1 |
| | | 47 |

**கல்வெட்டில் நாளும் கோளும்:**

தமிழகத்தில் உள்ள கல்வெட்டுகளில் காலம் குறிப்பிடும் மரபு நீண்ட காலமாக மன்னனின் ஆட்சியாண்டை மட்டும் குறிப்பதாகவே இருந்து வந்துள்ளது. சாளுக்கியர், இராட்டிர கூடர், தொடர்பு காரணமாக குறிப்பிட்ட சில கல்வெட்டுகளில் சக ஆண்டு குறிப்புகள் காணப்படுவதுண்டு. விஜய நகரர் காலத்திற்குப் பிறகு சக ஆண்டு, நாள் கோள் குறிப்புகள் விவரமாக குறிக்கப்பட்டிருக்கும். இதே போக்கினைக் காப்பலூர் கல்வெட்டுகளில் காண்கிறோம். தொடக்க காலக் கல்வெட்டுகளில் ஒன்று (க.எ.ண்.271) சக வருடம் 826யும் பிரகஸ்பதி விருச்சிக ஞாயிறு இருந்ததையும் குறிக்கிறது. இக்கல்வெட்டின் காலம் கி.பி.904 ஆகும். இது முதலாம் பராந்தக சோழன் ஆட்சிக்கு (கி.பி.907)முற்பட்டதாகும்.

சோழர் கால கல்வெட்டுகளிலும், இராட்டிர கூட மன்னன் கன்னரத்தேவன் கல்வெட்டிலும் ஆட்சி யாண்டுகளே சொல்லப்பட்டுள்ளன. பல வேளைகளில் ஆண்டுகள், எண்களாலும் சில சமயம் எழுத்தாலும் குறிக்கப்பட்டுள்ளன. விஜய நகரர்

| எண் | க.எண் | சகம்/கலி | தமிழ் வருடம் | மாதம் | பக்ஷம் | திதி | நாள் | கிழமை | நட்சத்திரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 244 | – | விக்ரம | தை | – | – | 5 | – | – | – |
| 2. | 245 | 14(6)2 | விகாரி | சிம்மம் (ஆவணி) | பகுல | 13 | – | திங்கள் | – | – |
| 3. | 246 | 1454 | நந்தன | சித்திரை | – | – | 12 | – | – | – |
| 4. | 250 | – | மன்மத | மாசி | – | – | – | – | – | – |
| 5. | 251 | – | ஜெய | பங்குனி | – | – | 11 | – | – | – |
| 6. | 252 | – | ஜெய | பங்குனி | – | – | 5 | – | – | – |
| 7. | 261 | – | துந்துபி | ஆனி | – | – | 25 | – | – | – |
| 8. | 264 | – | யுவ | வைகாசி | – | – | – | – | – | – |
| 9. | 271 | 825 | – | விருட்சிகம் | – (கார்த்திகை) | – | – | – | – | |
| 10. | 280 | – | பிரமாதி | தை | – | – | 5 | – | – | – |
| 11. | 285 | 1401 | விகாரி | ஆடி (கற்கடகம்) | – | 5 | – | – | ஹஸ்தம் | – |
| 12. | 289 | 1462 | பிலவ | ஆடி | – | – | 8 | வெள்ளி | – | – |

மற்றும் அதற்குப் பிற்பட்ட காலக் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் ஆண்டு, நாள், கோள் குறிப்புகள் இங்கு பட்டியலாகத் தரப்பட்டுள்ளன. இப்பட்டியலை பார்க்கும் பொழுது இரண்டு கல்வெட்டுகளில் மட்டும் வளர்பிறை, தேய்பிறை குறிப்புகள் உள்ளன. நல்ல காரியங்களை வளர்பிறையில் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லாமல் தேய்பிறையில் செய்ததை இக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. தமிழ் மாதங்களைப் பொறுத்த வரையில் சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, தை, மாசி, பங்குனி, ஆகிய ஏழு மாதங்களில் கொடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிலும் தை, பங்குனி மாதங்களில் அதிகமாகக் கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வூரில் காலக் குறிப்புகள் உள்ள கல்வெட்டுகள் குறைவாக இருப்பதால் இந்த மாதங்கள் கொடைகளுக்கு சிறப்பான மாதங்கள் என கருத்தில் கொள்ளலாம். (க.எண்கள். 244, 245, 246, 250, 251, 252, 261, 264, 271, 280, 286, 287) மேற்கூறப்பட்ட கல்வெட்டு எண்களில் அக்கால மன்னர்களின் கொடை ஆண்டுகள் தெரிவிக்கின்றன.

## கல்வெட்டில் நாட்டுப் பிரிவுகள்

இவ்வூரில் உள்ள தொன்மையான பல்லவர் காலக் கல்வெட்டுகளிலும், சகம் 826 குறிக்கும் கல்வெட்டிலும் இவ்வூருக்கான நாட்டுப்பிரிவு ஏதும் குறிக்கப்படவில்லை. ஊரின் பெயர் காமப்புல்லூர் என்று மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. முதலாம் பராந்தக சோழன் கல்வெட்டுகளில் ஒன்றில் மட்டும் ஊர் பெயர் மட்டும் காணப்படுகிறது. முதன் முதலாக இராட்டிர கூட மன்னன் கன்னரத் தேவன் கல்வெட்டு காமப்புல்லூர் பல்குன்ற கோட்டத்து வச்கூர் நாட்டு காமப்புல்லூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. சுந்தர சோழன், கரிகால் சோழன் கல்வெட்டுகளிலும் நாட்டு பிரிவுகள் சொல்லப்படவில்லை. இராஜராஜன் கல்வெட்டில் காப்பலூர் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து பங்கள நாட்டு மண்டைகுல நாட்டு இராஜசூளாமணி சதுர்வேதி மங்கலம் ஆகிய காமப்புல்லூர்'' என்று விரிவாகக் கூறுகிறது. (க.எ.ண262)

இராஜேந்திர சோழன் கல்வெட்டில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து பல்குன்ற கோட்டத்து மண்டைகுல நாட்டு இராஜசூளாமணி சதுர்வேதிமங்கலமான காமப்புல்லூர் (க.எண்.273) என்றும், பல்குன்றக் கோட்டம் என்று சொல்லப்படும் முதலாம் இராஜேந்திரனின் இரண்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டு பல்குன்றக் கோட்டம் என்ற கோட்டப் பிரிவையும் 6 - ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு பங்கள நாடு என்ற நாட்டுப் பிரிவையும் கூறுகின்றன.

முதலாம் குலோத்துங்கனின் 8 வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவனுடைய பட்டப் பெயரால் சுங்கம் தவிர்த்த சோழ சதுர்வேதி மங்கலத்து காமப்புல்லூர் என்று இவ்வூரையும், மேலும் இவ்வூர் பங்காள நாட்டுப் பிரிவின் கீழ் இருந்துள்ளதையும் அறிய முடிகிறது.

முதலாம் இராஜேந்திரன் காலத்தில் இருந்த இராஜசூளாமணிச் சதுர்வேதிமங்கலம் குலோத்துங்க சோழன் காலத்தில் சுங்கம் தவிர்த்த சோழச் சதுர்வேதிமங்கலம்' என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளது. (க.எண்.258)

குலோத்துங்கனுக்குப் பிறகு வந்த இரண்டாம் இராஜராஜன் கல்வெட்டு ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்ற கோட்டத்துப் பங்கள நாட்டு சுங்கம் தவிர்த்த சோழச் சதுர்வேதிமங்கலமான காமப்புல்லூர் என்று குறிப்பிட்டுள்ளது.

சம்புவராய மன்னன் இராசநாராயணன் காலத்தில் பங்கள நாட்டுக் காமப்புல்லூர் என்றும் விஜயநகரக் காலக் கல்வெட்டுகளில் காமப்புல்லூர் என்ற குறிப்பு மட்டுமே காணப்படுகின்றது. இவர்கள் காலக் கல்வெட்டுகளில் வேறெந்தப் பெயராலும் காமப்புல்லூர் அழைக்கப்படவில்லை.

இவ்வாறு காமப்புல்லூர் வசகூர் நாடு, பங்கள நாடு, மண்டைகுல நாடு, ஆகிய நாட்டுப் பிரிவுகளின் கீழ் இருந்துள்ளது.

## கல்வெட்டில் இறைவன் பெயர்

காலத்தால் முந்தைய பல்லவர் கல்வெட்டில் இறைவன் பெயர் ஏதும் குறிப்பிடவில்லை. சோழர் காலக் கல்வெட்டுகளில் இவ்விறைவன் பல பெயர்களால் அழைப்படுகிறார். காப்பலூர்க் கல்வெட்டுகளில் சிவன் கோயில் மற்றும் திருமால் கோயில் இறைவனது பெயர்கள் பல காலகட்டங்களில் பலவாறாக அழைக்கப்பட்டுள்ளன. மேலும் செப்புத் திருமேனிகள், பரிவாரக் கோயில் இறை உருவங்கள் மற்றும் இவ்வூரின் ஏனைய கோயிலின் இறைவன் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வூர்ப் பெருமாள் கோயிலில் முற்காலச் சோழர் கல்வெட்டு இல்லாததால் அவர் எவ்விதம் அழைக்கப்பட்டார் என்பது தெரியவில்லை. இங்குள்ள வீரபாண்டியன் தலைகொண்ட பரகேசரியான ஆதித்த கரிகாலனின் கல்வெட்டு இக்கோயிலை ஸ்ரீகாமை நக்கர் கோயில் என்று குறிப்பிடுகிறது. எனவே இப்பெயர் தொடக்க காலப் பெயராக இருக்கலாம். (க.எண்.247) புதிதாக அறியப்பட்ட இராஜேந்திரன் கல்வெட்டில் ஸ்ரீகயிலாயமுடைய திருக்காமைநக்கர் என்ற பெயர் காணப்படுகிறது.

விஜய நகர மனனர் அச்சுத தேவராயரின் கல்வெட்டுகளில் (க.எண்.246, 251) திருக்காமீசுவர தம்பிரானார் என்றும் திருக்காமீசுவர முடையார் என்றும் சிவபெருமானை அழைத்துள்ளனர். கி.பி. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்றில் திருக்காமீசுவர நாயானார் என்றும் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் (261க.எண்) திருக்காமீசுவர முடைய நாயனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. கோயிலின் பெயர் திருக்காமீசுவரம் என்று தொடர்ந்து எல்லாக் காலங்களில் அழைக்கப்பட்டுள்ளது. ஆனால் இறைவன் பெயர் ஸ்ரீகாமை நக்கர், திருக்காமீசுவரமுடையார், திருக்காமீசுவரர், தம்பிரானார், திருக்காமீசுவர நாயினார், திருக்காமீசுவர நயினார் என்ற மாற்றங்கள் பெற்றுள்ளன. தேவராயர் காலத்தில் (க.எண்.246) செங்கப்புத்தேரி நகரத்தார் அம்மன் படிமம் ஒன்றினைப் பிரதிஷ்டை செய்துள்ளனர். மேலும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் அச்சுத தேவராயர் காலத்தில் வல்லவ ராயர் பகவானார் என்பவர் இக்கோயில் 'அதிரும் கழல் பெருமாள்' மற்றும் 'ஆவுடை

நாச்சியார்' ஆகிய தெய்வங்களுக்கு 5 விளக்குகள் எரிக்கக் கொடையளித்துள்ளார். இதில் 'அதிரும் கழல் பெருமாள்' என்பது ஆடவல்லான் எனும் நடராஜரைக் குறிக்கின்றது. மேலும் இதனில் குறிக்கப்படும் ஆவுடை நாச்சியார் என்பது நடராஜன் தேவியான சிவகாமியைக் குறிக்கும். திருமால் கோயிலில் உள்ள சகவருடம் 826 (கி.பி.904) ஆண்டு கல்வெட்டு (க.எண்.263) 'மேலை ஸ்ரீ கோயில் ஆழ்வார்' என்று திருமால் கோயிலைக் குறிக்கின்றது. இக்கோயிலில் உள்ள பராந்தகன் மற்றும் இராட்டிடகூட மன்னனான கன்னரத் தேவன் கல்வெட்டுகளில் இக்கோயிலுக்குக் கொடை அளித்த செய்திகள் ஏதும் இல்லாததால் பெயர் அறிய முடியவில்லை.

பரகேசரி வர்மன் கல்வெட்டு என்றழைக்கப்படும் முதலாம் பராந்தகனின். கல்வெட்டு 'கலியாதித்த விஷ்ணு கிருகத்து தேவர்' என்று திருமாலைக் குறிக்கிறது. வீரபாண்டியன் தலைகொண்ட பரகேசரியான ஆதித்த கரிகாலனின் கல்வெட்டு 'கலியாச்சி விண்ணகர்' என்று திருமால் கோயிலைக் குறிக்கிறது (க.எண்.249)

முதலாம் இராஜேந்திர சோழனின் 6-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வூர் ஜனநாத விண்ணகரத்தில் உள்ள பள்ளிகொண்டருளின தேவர் எனக் குறித்துள்ளது. இக்கோயில் அனந்தசாகியாகத் துயில் கொண்ட நிலையில் பள்ளி கொண்ட பெருமாள் உருவம் ஏதும் இல்லை. எனவே இக்கல்வெட்டில் குறிக்கப்படும கோயில் அல்லது இறைவன் எதுவென்று தெரியவில்லை.

மூன்றாம் இராஜராஜனின் கல்வெட்டு, 'கலியாதித்த விண்ணகராழ்வார்' என்று திருமாலை குறிப்பிடுகிறது (க.எண்.275). கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டொன்று (க.எண்.264) 'வீற்றிருந்த பெருமாள்' என்று ஓர் இறைவனை குறிக்கிறதும் இன்று திருமால் கோயிலில் உள்ள இறைவன் நின்ற நிலையில் உள்ளார். எனவே வீற்றிருந்த பெருமாள் (உட்கார்ந்த நிலை) எது என்று அறிய இயலவில்லை.

சப்தமாதர் கோயிலில் பரகேசரி வர்மன் கல்வெட்டு (க.எண்.286) சங்கர நாராயணர் தேவரையும், ஒரு தேவியார் கோயிலையும் (இப்பகுதி கல்வெட்டு சிதைந்துள்ளது) குறிப்பிடுகிறது. தேவியார் கோயில் இக்கல்வெட்டுள்ள சப்தமாதர்களை குறிப்பிடுகிறது. சங்கரநாராயணர் என்பது சிவனும் திருமாலும் இணைந்த தோற்றமாகும். மேலும் இதே சங்கர நாராயணர் மூன்றாம் இராஜராஜ சோழன் கல்வெட்டிலும் (க.எண்.288) குறிக்கப்பட்டுள்ளார்.

கி.பி. 9ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்ட கல்வெட்டொன்றின் (க.எண்.287) இறுதிப் பகுதி இவ்வூரைச் சார்ந்த மண்ணுடையார் முதலில் பிடாரி கோயில் வழிபாடு செய்ய வேண்டும் என்ற நியதியை சொல்வது நோக்கத் தக்கதாகும். மண்ணுடைகாரான் என்பது காளியை குறிக்கும். காடுகாள் என்பது துர்கையை குறிக்கும். இவ்வூரில் இவ்விரு தெய்வங்களுக்கென்று தனித்தனிக் கோயில்கள் இருந்துள்ளன. இவ்வூர்க் கல்வெட்டுகளில் இவ்வூரைத் தவிர பிற ஊர் தெய்வங்களும் கோயில்களும்

குறிக்கப்பட்டுள்ளன. இராஜேந்திர சோழனின் கல்வெட்டு (க.எண்.273) சேயாற்றின் மேலைக் கரையில் உள்ள 'திருவேங்கைப் பள்ளி பரமசாமி கோயில்' வழிபாட்டுக்கு இறையிலி நிலங்கள் காமப் புல்லூர்ச் சபையினர் கொடுத்ததைக் கூறுகிறது. இங்கு செய்யாறு கிழக்கு மேற்காக ஓடுவதால் தெற்கு வடக்குக் கரையிலே அமையும். எனவே திருவேங்கைப் பள்ளி சேயாற்றின் கரையில் எங்கு அமைந்துள்ளது என்று ஆய்வுக்குரிய தாகும். இராஜகேசரி கல்வெட்டு (க.எண்.281) 'ஸ்ரீ மத்துவாரகை ஆழ்வாரை' குறித்துள்ளது. இது கிருஷ்ணனாக இருக்க வேண்டும். துண்டுக் கல்வெட்டு என்பதால் இந்த கோயில் பற்றிய விவரம் அறியமுடியவில்லை. தேவராயரின் கல்வெட்டு (க.எண்.285) திருவண்ணாமலைக் கோயிலில் சாளுவ நரசிம்ம மஹாராயன் பிறந்த நட்சத்திரத்தில் வழிபாடுகள் நடத்துவதற்காகக் காமப்புல்லூரில் நிலங்கள் கொடுத்ததைக் கூறுகிறது. இதே போன்று குலோத்துங்க சோழனின் கல்வெட்டும் (க.எண்.258) பெரிய கோயிலான திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) நந்தவனப் பராமரிப்பிற்காகக் காமப்புல்லூரில் நிலம் கொடுத்ததை விவரிக்கிறது.

# கல்வெட்டுகளில் சமுதாயம்

காப்பலூர்க் கல்வெட்டுகளின் வாயிலாகச் சில சமுதாய அமைப்புகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. பண்டைய ஊர்களில் விவசாயிகள், 'ஊர்' என்ற அமைப்பும், வணிகர்கள் 'நகரம்' என்ற அமைப்பும், அந்தணர்கள் 'சபை' என்ற அமைப்பும் கொண்டு பொதுச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். காப்பலூர் கல்வெட்டில் பிராமணர்களாகிய சபையினர் நடவடிக்கையே அதிகம் காணப்படுகின்றன. எனினும் அங்கொன்றும் இங்கொன்றும் ஆக ஊரவர், நகரத்தார் பற்றிய செய்திகளும் கிடைக்கின்றன.

**ஊரார்:**

கி.பி. 16 ஆம் நூற்றாண்டுக்கு பிறகே ஊரவர் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. காமப்புல்லூர் ஊரவர் திம்மப்ப நாயக்கர் சிறப்பாக நிகழ்த்தப்படும் மகாநவமி திருவிழாவிற்காக நிலங்கள் குடுத்த செய்தியை மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. ஊரவர் பற்றிய நடவடிக்கைகள் தெரியாவிட்டாலும் ஊர் என்ற அமைப்பு இருந்ததை இக்கல்வெட்டு மூலம் அறிகிறோம். அச்சுததேவ மகாராயர் காலத்திய பிறிதொரு கல்வெட்டு ஊரவரும், கோயிலாரும் லட்சுமண ரெட்டி என்பவர் முதலில் ஒற்றி வைத்திருந்த அரசின் தேவைகளைத் திருப்பிய நிலத்தை வருங்காலங்களில் மீண்டும் ஒற்றிவைக்கக் கூடாது என்று 'ஆணைவாரம்' என்ற ஒரு ஆவணம் வெளியிட்ட செய்தியைத் தருகிறது. இக் கல்வெட்டின் மூலம் ஊரவர்க்கு நிலங்கள் தொடர்பாக குறிப்பிடத்தக்க மேலதிகாரம் இருந்தச் செய்தியை அறியமுடிகிறது.

**வணிகர்:**

இவ்வூர்க் கல்வெட்டுகளில் வணிகர் பற்றிய சில செய்திகள் தெரிய வருகின்றன. வீரபாண்டியன் முடி கொண்ட ஆதித்த கரிகாலனின் கல்வெட்டு தஞ்சாவூர் பெரிய அங்காடியைச் சேர்ந்த மாயிலாட்டியின் மகன் அய்யாரன் ஆகிய நூற்றெணம கவரச்செட்டி விளக்கெரிக்க நிலம் கொடுத்தச் செய்தியைக் கூறுகிறது. ''மாயிலாட்டி'' என்பது எண்ணெய் வாணிகத்தைக் குறிக்கும். இதே மன்னனின் மற்றொரு கல்வெட்டில் சோழ நாட்டில் கோமல் என்ற ஊரைச் சேர்ந்த கோழியக்குடி உடையான் பார்த்திபசேகரனின் மகனான பிரிதிராம செட்டி என்ற வணிகன் விளக்கெரிப்பதற்கு நிலம் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கிறது. இவ்விரு கல்வெட்டுகளை நோக்கும்போது

சோழராதிக்கத்தின் கீழ் இப்பகுதி வந்தபோது சோழ நாட்டைச் சார்ந்த கோமல், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் இருந்து வணிகர்கள் இப்பகுதிக்கு வணிகம் செய்ய வந்துள்ளனர். மேலும் அவ்வணிகர்கள் கோயில்களுக்குக் கொடையும் அளித்துள்ளனர் அச்சுததேவராயரின் கல்வெட்டு செங்கம்புத்தேரி நகரத்தார் காமீசுவரமுடையார் கோயிலில் ஓர் அம்மன் சிற்பத்தை நிர்மாணித்து வழிபாடு செய்துள்ளனர். இம்மூன்று கல்வெட்டுகளும் வெளியூர் வணிகர்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

### பிராமணர்கள்

பல்லவ மன்னனான நந்திவர்மன் காலத்திய புல்லூர்ச் செப்பேட்டின் மூலம் காமப்புல்லூரில் பிரம்மதேயமான பிராமணர் குடியிருப்பு ஏற்படுத்தியதை அறிகிறோம். பல்லவ மன்னனான கம்பவர்மனின் கல்வெட்டில் காமப்புல்லூர்ச் சபையின் உறுப்புட்டூர் நரசிங்க திரிவேதி என்பவருக்கு நிலம் கொடையாக அளித்த செய்தியைத் தருகிறது. முதலாம் பராந்தகன் கல்வெட்டில் சபையாரிடம் பிள்ளையார் கோதண்டராமன் செய்த செய்தி சொல்லப்படுகிறது. இதுவும் அந்தணர் நிலங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட நீர்பாசன வசதிகளை குறிப்பிடுகிறது.

இராட்டிர கூட மன்னன் கன்னரத் தேவரின் கல்வெட்டுகளில் ஒன்று அந்தணர்களுக்கு பட்டவிருத்தி நிலம் ஆளுங்கணத்தார் கொடுத்ததையும் மற்றொன்று அதே ஆளுங்கணத்தார் தானப்புறம் கொடுத்ததைக் குறிக்கின்றன. (க.எண்.269) மதிரை கொண்ட ராஜகேசரி, சுந்தரசோழன், வீரபாண்டியன் தலை கொண்ட ஆதித்த கரிகாலன் ஆகியோர் கல்வெட்டுகளில் இவ்வூரில் வேதப்பள்ளி ஒன்று இருந்த செய்தியும், அம் மாணவர்களுக்கு சந்தோகம் (வேதம்) சொல்லிக் கொடுக்கப்பட்ட செய்தியையும் தருகின்றது. மேலும் கிடைப்புறம், விருத்தி நிலம் ஆகியவை ஆளுங்கணத்தார் கொடுப்பதற்காக சபை நிலம் விட்ட செய்தியும் சொல்லப்பட்டுள்ளது. முதலாம் இராஜராஜன் காலத்திய கல்வெட்டு (க.எண்.265) ஆளும்கணத்தைச் சார்ந்த ஒருவர் ஊர் கோயில் நடுவில் இருந்த முகமண்டபத்தில் விளக்கு எரித்த செய்தியைக் கூறுகிறது. முதலாம் இராஜேந்திர சோழன் (க.எண்.262) கல்வெட்டிலும் இவ்வூர்ச் சபையினர் பற்றிய விவரம் தெரிய வருகிறது. கொடையாக அளித்த நிலத்திற்கு இச் சபையினர் வரிவிலக்கு அளித்துள்ளனர்.

# கல்வெட்டில் கொடைகள்

## நிலக் கொடைகள்

பண்டைய தமிழக வரலாற்றில் கோயில்கள் மற்றும் பிராமணர்களுக்கு நிலக் கொடைகள் அளித்து வருவது தொன்றுதொட்டு இருந்து வருவதாகும். இதே போன்று பல்லவர், இராட்டிரகூடர், சோழர், விஜயநகரப் பேரரசர்கள், சம்புவராயர் போன்றவர்களின் ஆட்சிக் காலங்களில் நிலக்கொடைகள் அளித்த செய்தியினைக் காப்பலூர்க் கல்வெட்டுகள் வாயிலாகக் காண்போம்.

## பல்லவர் மற்றும் இராட்டிரகூடர் காலம்

பல்லவ மன்னன் கம்பவர்மன் காலத்தில் காமப்புல்லூர் ஊர் சபைக்கு நிலம் கொடையாக அளித்ததைத் தெரிவிக்கிறது.

இராட்டிரகூட மன்னர் கன்னரத்தேவன் ஆட்சி காலத்தில் காமப்புல்லூர் ஆளுங்கணத்தினர் நால்வர்க்கு பட்டவிருத்தியாக நிலம் அளித்தச் செய்தியைத் (க.எண்.272) தெரிவிக்கிறது. பட்டவிருத்தி நிலம் என்பது கோயில்களில் ஊழியம் புரியும் பிராமணர்களுக்கு ஜீவிதம் செய்ய வழங்கப்பட்ட நிலமாகும்.

## சோழர் காலக் கொடைகள்

சுந்தர சோழனுடைய ஆட்சியாண்டில் தஞ்சாவூர்ப் பெரிய அங்காடி வணிகர் அய்யனார் மகன் மாயிலட்டி என்பவன் கோயில் விளக்கெரிய நிலம் கொடையளித் துள்ளான்.

இதே மன்னனுடைய காலத்தில் திருவடிகள் என்கிற பிரிதிராமசெட்டி மகன் பார்த்திவசேகரன் என்பவன் சோணாட்டை சார்ந்த கோலியக்குடி வணிகனாவான். இவன் கோயிலில் விளக்கெரிக்க நிலம் தானமாகக் கொடுத்துள்ளான். (க.எண்.248)

இராஜேந்திர சோழனின் கல்வெட்டொன்று செய்யாறு ஆற்றின் மேற்குப் புறமுள்ள திருவெங்கைப் பள்ளிக்கும் காமப்புல்லூர் மகாசபைக்கும் நிலம் கொடையாக அளித்த செய்தியைத் தருகிறது. ‘காமப்புல்லூர் இராஜகுல சதுர்வேதி மங்கலம்’ என்னும் இவ்வூர் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்து மண்டகுல நாட்டுப் பிரிவின் கீழ் அமைந்திருந்ததைத் தெரிவிக்கிறது.

இராஜேந்திர சோழனுடைய (க.எண்.275) கல்வெட்டில், 'காமப்புல்லூரில் இருக்கும் கலியாதித்த விண்ணகர்' ஆழ்வார் கோயிலில் இருக்கும் அடிகளுக்கு நிலம் கொடையளிக்கப்பட்டது. இக்கல்வெட்டில் காமப்புல்லூர் சுங்கம் தவிர்த்த சதுர்வேதி மங்கலம் என்றும் பங்கள நாடு 'பல்குன்ற கோட்டம்', 'ஜெயங்கொண்ட சோழ மண்டலம்' என்ற பிரிவுகளையும் கூறுகிறது.

இராஜகேசரிவர்மனுடைய காலத்தில் காமப்புல்லூரில் இருக்கும் மேலை ஸ்ரீ கோயில் திருமாலுக்கு நந்திபோசர் தளிபெருமான் என்பவன் நிலம் தானமாக அளித்த செய்தியைத் (க.எண்.271) தெரிவிக்கிறது.

## விஜயநகரர் காலக் கொடைகள்

அச்சுதேவராய மஹாராயர் கல்வெட்டு (கி.பி.1532) செங்கப்புத்தேரி நகரத்தார் காமப்புல்லூரில் இருக்கும் திருக்காமிசுரமுடைய தம்பினார்க்கு நிலம் அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது.

அச்சுதேவராயரின் மற்றொரு கல்வெட்டு (க.எண்.245) காமீசுரமுடைய கோயிலுக்கு ஊழியர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு அர்ச்சனா விருத்தியாக நிலம் அளித்த செய்தியைக் கூறுகிறது.

காமப்புல்லூர் ஊரவர்கள் திம்மப்ப நாயகன் போரால் 'மகாநவமி' திருவிழாவிற்கு நிலம் கொடையாக அளித்துள்ளனர்.

## பணம் கொடை

வீர பாண்டியன் கல்வெட்டில் கலியாதித்த விண்ணகர தேவர் கோயிலில் விளக்கு வைப்பதற்குப் பணம் கொடையாக அளித்த செய்தியை அறிய முடிகிறது. இதனை சோணாட்டு கோமல் கலியாக்குடியைச் சார்ந்த பிரிதிராம செட்டி என்பவன் அளித்துள்ளான்.

வல்லவராய பகவானார் 5 விளக்குகள் வைக்க பணம் அளித்த செய்தியைத் (க.எண்.252) தெரிவிக்கிறது.

**வீடு கொடை:-** அச்சுததேவ மகாராயர் காலத்தில் காமப்புல்லூரைச் சார்ந்த அய்யன் மங்கல அரையன் என்பவருக்கு வீடு கொடையாக அளிக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டுகளில் வழிபாடுகள் மற்றும் விழாக்கள்

காமப்புல்லூர் கல்வெட்டுகள் பெரும் பகுதி விளக்கெரிக்க நிலமும் பணமும் தானமளித்ததைக் கூறுகின்றன.

இராஜேந்திரனின் கல்வெட்டில் தேவகோட்டத்தில் உள்ள தென்முகக் கடவுளான தட்சணாமூர்த்திக்கு மூன்று கால வழிபாடுகள் நடந்த செய்தி கிடைக்கிறது. ஒரு

கல்வெட்டில் (க.எண்.260) மடப்பள்ளி செலவுக்கு 1000குழி நிலம் தானமளித்து உணவு தயாரித்துப் படைக்கப்பட்டு வழிபாடு நிகழ்ந்ததை அறிய முடிகிறது. அர்ச்சனாவிருத்தி (க.எண்.245) நிலம் பற்றிக் குறிப்பதால் இறைவனுக்கு அர்ச்சனைகள் செய்ய நிலம் ஒதுக்கப்பட்டிருந்ததை மற்றொரு கல்வெட்டின் மூலம் அறிகிறோம்.

விஜய நகர மன்னன் சாளுவ நரசிம்மதேவ மகாராயரின் (க.எண்.285) பிறந்த நட்சத்திரமான அனுசத்தின்போது திருவண்ணாமலைக் கோயிலில் வழிபாடு நடத்தக் காமப்புல்லூர் நிலத்திற்கு வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டுகளில் நந்தவனம் பற்றிய குறிப்புகளால் மலர் வழிபாடு நிகழ்ந்தது தெரிய வருகிறது.

மேலும் இரு கல்வெட்டுகளில் விழாக்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. (க.எண்.244), (க.எண்.261) அச்சுததேவராயரின் கல்வெட்டு செய்தி மகாநவமி திருவிழா நடைபெற்றதைக் குறிக்கிறது. மகாநவமி என்பது நவராத்திரி திருவிழாவில் நவமி திதியில் அரசன் அல்லது தெய்வம் ஓலக்கம் (தர்பார்) இருந்து காட்சி கொடுப்பதாகும்.

# சிறப்புச் செய்திகள்

**ஏரியும் பராமரிப்பும்:**

பெருமாள் கோயிலின் கட்டட கற்கள் மாற்றி வைத்து கட்டப்பட்ட மதிரைகொண்ட பரகேசரி வர்மனான பராந்தக சோழனின் கல்வெட்டு இவ்வூர் ஏரி பராமரிக்கப்பட்டச் செய்தியைக் குறிப்பிடுகிறது. மன்னரின் மகனான (பிள்ளையார்) கோதண்டராமன் உட்பட மூவர் ஊர் சபையினரிடம் ஒரு குறிப்பிட்ட தொகையினைக் குடுத்து ஆண்டு தோறும் ஏரியில் உள்ள வண்டலை எடுத்து, தூர் வார்த்து பராமரிக்க ஏற்பாடு செய்துள்ளனர். ஏரியின் நடுவில் இருந்து கரைக்கு வாரிய தூரை எடுத்து வருவதற்கான ஓர் ஓடம் (படகு) நன்கொடையாகக் குடுத்துள்ளனர். இதேபோல் ஏரியில் தூர் வாரி ஓடங்கள் குடுத்த செய்திகள் உத்திரமேரூர், உக்கல் போன்ற ஊர் கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன. தற்போதும் இவ்வேரி தான் ஊரின் விவசாயத்திற்கு உயிர் நாடியாக இருப்பது குறிப்பிடத் தக்கது. (284)

மேலும் கொற்றமங்கலத் தலைவன் மற்றும் அமைச்சர் மும்முடிச் சோழன் தூரனடி ஏரியிலிருந்து காமப்புல்லூர் மகாத்தடாகத்துக்கு வாய்க்கால் வெட்டியுள்ளதை மற்றொரு கல்வெட்டால் அறிகிறோம். (எ.எண் 276).

பெருமாள் கோயிலில் உள்ள பரகேசரி வர்மனின் 13ஆவது ஆட்சியாண்டு மற்றும் மதிரை கொண்ட ராஜகேசரி வர்மனின் 6ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டுகள் (க.எண்.268, 270) சந்தோக கிடைப்புறம் சந்தோக விருத்தியைப் பற்றி குறிப்பிடுகின்றன. இவை வேதம் கற்கும் மாணவர்களுக்கு வழங்கப் பட்ட நிலங்களாகும். பரகேசரி வர்மனான முதலாம் பராந்தகன் காலத்தில் காமப்புல்லூர் சபையின் இவ்வூர் ஆளுங்கணத்தைச் சார்ந்த அத்திந்த கிரமவித்தனுக்கு சந்தோக கிடைபுறமாக நிலம் விற்கப்படுகிறது. மதிரை கொண்ட ராஜகேசரிவர்மன் சுந்தர சோழன் காலத்திலும் இக்கோயிலில் தொடர்ந்து மாணவர்களுக்குக் கல்வி போதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இம்மன்னன் காலத்தில் காமப்புல்லூர் சபையின் இரண்டு ஆளுங்கண நபர்களுக்கு நிவந்தமாக நிலம் விற்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

மற்றும் இராஷ்டிர கூட மன்னன் கன்னரத் தேவன் காலத்திலும் கல்வியறிவு உள்ள அந்தணர்களுக்குத் தானமளிக்கப்பட்டுள்ளது. இவனது காலத்தில் இதே சபையின்

4 ஆளுங்கண உறுப்பினர்களுக்கு நிலம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலங்கள் கல்வியாளர்களுக்கு பயன்படுத்தப்பட்டன.

### மடைப்பள்ளி

குலோத்துங்க சோழன் காலக் கல்வெட்டு ஒன்று (க.எண்.260) இக்கோயில் (சிவன்) திருச்சுற்றும், மடைப்பள்ளியும் பிரிதிவிகங்கனின் மகன் அழகிய சோழன் என்பவனால் கட்டப்பட்ட செய்தியைக் கூறுகிறது. மேலும் சித்திரமேழி தொண்டைமான் என்பவர் மடைப்பள்ளிச் செலவுக்காக 1000 குழி நிலம் தானமளித்த செய்தியைக் கூறுகிறது.

### உலா

'திருக்காமி அவதானியார் என்பவருக்கு 'குமாரசாமி உலா' எழுதியதற்காகவும் திருவிழா நடத்திடவும் 100 குழி நிலத்தினை அப்பையனின் முகவரான சொக்கப்பிள்ளை அய்யன் மற்றும் கோயில் நிர்வாகத்தினர் அளித்துள்ள செய்தியைக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. (க.எண்.261)

பிற்காலச் சோழர்களாகிய குலோத்துங்கன் மற்றும் மூன்றாம் இராஜராஜன் காலத்திய கல்வெட்டுகளில் சபை பற்றிய செய்திகள் காணப்படவில்லை. அதே போல் விஜயநகர மன்னர் காலத்திலும் சபை பற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை. காப்பலூர்க் கல்வெட்டுகளின் வாயிலாகப் பல்லவர் காலம் முதல் விஜய நகரர் காலம் வரை காப்பலூரில் பிராமணர்கள் சிறப்பிடம் பெற்று இருந்துள்ளனர். ஆனால் அவர்களுக்கென்று இருந்த சபை, மகா சபை, ஆளுங்கணம் என்ற அமைப்புகள் பல்லவர் காலம் தொடங்கி இராஜராஜன் காலம் வரை நிலங்களைப் பெற்றிருந்து, ஊர் நிர்வாகத்தினையும் மேற்கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகிறது. பின்னாளில் இக்குழு அமைப்பு ஊர் நிர்வாகத்தில் செல்வாக்கு செலுத்தும் சிறப்பு குறைந்துவிட்டது என்பது தெளிவாகிறது.

### சித்திரமேழி

கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் விவசாயத்தை மேற்கொண்டிருந்த சில பிரிவினர் வணிகர்களாக மாறிய பொழுது விவசாயம், வணிகம் இரண்டையும் தொழில்களாகக் கொண்டிருந்தனர். அந்நிலையில் அவர்களிடையே பெரிய நாடு என்ற அமைப்புகள் தோன்றின. அவ்விதம் அமைந்த அமைப்பே சித்திரமேழி பெரியநாட்டார் என்ற அமைப்பாகும். இவர்கள் கலப்பையாகிய மேழியை தெய்வமாக வணங்கியவர்கள். எனவே 'சித்திரமேழி பெரியநாட்டார்' எனப்பட்டனர். சித்திரமேழி தொண்டைமான் என்பவன் புதிதாகக் கட்டப்பட்ட மடைப்பள்ளிச் செலவுகளுக்கு 1000 குழி நிலம் அளித்த செய்தியைக் குலோத்துங்கனின் 16ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

## அரச குடும்பத்தினர்

காப்பலூர்க் கல்வெட்டுகளில் அரச குலத்தைச் சார்ந்த இருவர் நேரடியாகக் கொடைகள் அளித்துள்ளனர். மதிரை கொண்ட பரகேசரியான பராந்தக சோழனின் கல்வெட்டு (க.எண்.284) ஊர் ஏரியில் தூர் வார ஓடம் கொடுத்த செய்தியைச் சொல்லும் பொழுது கொடை கொடுத்தவராகப் பிள்ளையார் கோதண்டராமன் என்பவர் சொல்லப் பட்டுள்ளார். பராந்தக சோழனின் பிரதிநிதியாகத் தொண்டை மண்டலத்தை ஆட்சி செய்த மூத்த மகன் இராஜாதித்தனுக்கு கோதண்டராமன் என்ற பெயருண்டு. அவனே இக் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளான். பராந்தகச் சோழனின் (க.எண்.203) மற்றொரு கல்வெட்டு கங்க பெருந்தேவி என்பவள் கொடையாக பொன் கொடுத்து அந்தணர்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்துள்ளாள். இவள் பங்கள நாட்டு மாதேவரின் மகனான காமடிகள் என்பவரின் மனைவியாக இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். 1936-ஆம் ஆண்டு கல்வெட்டு ஆண்டறிக்கையில் இந்த மாதேவர் பல்லவ மன்னன் கம்பவர்மனின் அதிகாரியாக குறிக்கப்பட்டுள்ளது. எனவே தந்தை மாதேவர் கம்பவர்மன் காலத்திலும் மகன் காமடிகள் பராந்தக சோழன் காலத்திலும் இருந்துள்ளனர் என்பது தெரியவருகிறது. இந்த தேவியார் கங்க பெருந்தேவியார் என்ற குறிப்பு காமடிகளை கங்கனாகவோ அல்லது இந்த தேவியார் பிறந்த மரபு கங்க மரபாகவோ இருக்கலாம்.

# கல்வெட்டுகள்

## இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1938 - 39

### க.எண்.244:

திருக்காமீசுவரர் திருக்கோயிலின் வடக்கு சுவரில் வெட்டப்பட்டுள்ள கி.பி. 16ஆம் நூற்றாண்டு எழுத்தமையிலுள்ள கல்வெட்டு விக்கிரம ஆண்டு தை 5ஆம் தேதி திம்மப்ப நாயக்கர் என்பவர் மகாநவமி திருவிழாவிற்கு நிலம் கொடையாக அளித்த செய்தியினைத் தெரிவிக்கிறது.

### க.எண்.245:

இக் கோயிலின் கருவறை வடக்கு, மேற்கு புறம் வெட்டப்பட்டுள்ள இக் கல்வெட்டானாது அய்யன் வரதப்பய்யன் என்பவரை கோயில் ஊழியராக நியமித்து நிலம் கொடையளித்தச் செய்தியைத் தெரிவிக்கிறது.

### க.எண்.246:

அதே சுவரில் செங்கபுத்தேரி மற்றும் காமப்புல்லூர் நகரத்தார் காமம்புல்லூர் திருக்காமீசுவரம் உடைய தம்பிரனார் கோயிலில் உள்ள அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட இறைவிக்கு வழிபாடு செய்ய நிலம் அளித்த செய்தியை குறிக்கிறது. இக் கல்வெட்டு சக ஆண்டு 1454 (கி.பி. 1532) என்று குறிக்கப்பட்டுள்ளது.

### க.எண்.247:

முன் மண்டபத்தில் உள்ள தூண் கல்வெட்டு சோழ மன்னர் பரகேசரிவர்மன் காலத்தியது. கல்வெட்டு செய்தியாவது மாயிலாட்டி மகன் அய்யாரன் எனும் நூற்றெண்மக் கவர செட்டி என்பவர் தஞ்சாவூர் பெரிய அங்காடியில் வணிகராக இருந்ததையும் இவர் இக்கோயில் விளக்கெரிப்பதற்க நன்கொடையாக நிலம் அளித்த செய்தியை தெரிவிக்கிறது.

### க.எண்.248:

சோணாட்டு கோமலைச் சார்ந்த வணிகனான கோலியக்குடி பார்த்திவசேகரன் மகன் திருவடிகன் எனும் பிரித்திராம செட்டி என்பவர் இவ்வூர் கோயிலில் விளக்கெரிக்க நிலம் கொடையளித்துள்ளார்.

**க.எண்.249:**

அதே மண்டபத்தின் மற்றொரு தூணில் முற்றுப் பெறாத கல்வெட்டில் கலியாதிச்ச விண்ணகர்கோயில் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

**க.எண்.250:**

முன் மண்டபத்தின் வடக்குப் புறச்சுவரில் மன்மத வருஷம் மாசி 10ஆம் தேதி என்று குறிக்கப்பட்டுள்ளது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இக் கல்வெட்டுச் செய்தியானது காமப்புல்லூர் வெள்ளாளரான வில்லவராயர் பகவானர் என்பவர் பணம் கொடையாக அளித்த செய்தியும் அப்பணம் நிலம் ஏலக் குத்தகையாக எடுக்கப்பட்டு அந்நிலத்தில் பூந்தோட்டம் அமைக்கும் செய்தியை தெரிவிக்கிறது.

**க.எண்.251:**

அதே சுவரில் செய வருஷம் பங்குனி 11 என்ற குறிப்புள்ள கல்வெட்டில் அச்சுத மஹாராயர் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கோயிலுக்கு ஊழியர் நியமனம் செய்த செய்தியைத் தெரிவிக்கிறது.

**க.எண்.252:**

அதே சுவரின் பங்குனி 5ஆம் என்ற நாட்குறிப்புடன் உள்ள கல்வெட்டு அதிருங்கழல் பெருமான், ஆவடை நாச்சியார் ஆகியோருக்கு வழிபாடு மற்றும் ஐந்து விளக்கு வைக்க வில்லவராயர் பகவானர் என்பவர் பணம் அளித்துள்ள செய்தியைக் கூறுகிறது.

**க.எண்.253:**

கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இக் கல்வெட்டானது நடவில் நாட்டு திருமூரைச் சார்ந்த அருளாளப் பெருமாள் வில்லவரையன் என்பவர் கோயில் திருப்பணி மேற்கொண்டதைத் தெரிவிக்கிறது.

**க.எண்.254:**

முழுமையாடையாத இக்கல்வெட்டில் சம்புவராயன மன்னன் சகலலோக சக்கரவர்த்திகள் இராச நாராயணன் காமப்புல்லூர் ஊரவர் வரி செலுத்துவது தொடர்பான ஆணையாகும்.

**க.எண்.255:**

மிகவும் சேதமடைந்த இக்கல்வெட்டானது இக் கோயிலின் சமயலறையின் வடக்குபுறச் சுவரில் காணப்படுகிறது. திரிவுவன சக்கரவர்த்தி ராஜராஜதேவ என்று மன்னனின் பெயர் குறிக்கப் பெற்றுள்ளது ஆனால், ஆட்சியாண்டு குறிப்பிடப்படவில்லை. பிருதிவிகங்கன் எனும் அரசகலநாயன் என்பவன் இக்கோயிலுக்கு நிலமொன்றினைத் தானமளித்துள்ளதைக் கூறுகிறது.

**க.எண்.256:**

திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராஜராஜதேவரின் 4ஆவது ஆட்சியாண்டில் முந்தையக் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள நிலையிட்ட பெருமாள் அரச கல்நாயன் எனும் குலோத்துங்கச் சோழ பிரிதிவி கங்கன் என்பவன் மேலும் நிலம் தானமளித்த செய்தியினைக் கூறுகிறது.

**க.எண்.257:**

முதல் திருச்சுற்றின் வடக்கு புறம் உள்ள இரண்டு படுக்கை கல்லில் வீர ராஜேந்திரனின் 3ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு காணப்படுகிறது. இக்கல்வெட்டில் ஊர்சபையார் கோயிலுக்கு நிலம் அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது.

**க.எண்.258:**

திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவனின் 8ஆவது ஆட்சியாண்டில் பங்கள நாட்டு காமப்புல்லூர் எனும் சுங்கம் தவிர்த்த சோழச் சதுர்வேதி மங்கலத்தில் பிரிதிவி கங்கன் நிலம் தானமளித்து இந்நிலத்தின் வருவாயிலிருந்து திருவரங்கம் பெரிய கோயில் பூந்தோட்டத்தினைப் பராமரிக்க ஏற்பாடு செய்துள்ள செய்தியைத் தருகிறது.

**க.எண்.259:**

இக்கல்வெட்டில் ''திருமன்னி வளர'' எனும் முதலாம் இராசேந்திரனின் மெய்க்கீர்த்தி முழுமை பெறாமல் உள்ளது.

**க.எண்.260:**

திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவரின் 16-ஆவது ஆட்சி யாண்டில் ஆணைகட்டின பிரதிவி கங்கன் கூத்தாடுந்தேவன் மகன் அழகிய சோழமான் என்பவன் இக்கோயிலின் திருச்சுற்று மற்றும் மடப்பள்ளியைக் கட்டியுள்ளான். சித்திரமேழி தொண்டைமான் என்பவர் மடப்பள்ளி செலவுக்காக 1000 குழி நிலம் தானமாக அளித்த செய்தியையும் தெரிவிக்கிறது.

**க.எண்.261:**

இக்கோயிலின் முன்பு கீழே புதைக்கப்பட்டுள்ள கி.பி. 18ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் அப்பயன் முகவரான சொக்கப்பிள்ளை அய்யன் என்பவரும் திருக்காமீசுர முடைய நாயனார் கோயில் நிர்வாகிகளும் திருக்காமி அவதானியார் என்பவருக்கு 'குமாரசுவாமி உலா' இயற்றியதற்கும் திருவிழா நடத்துவதற்கும் 100 குழி நிலத்தினை தானமாக அளித்துள்ளனர் என்பதை விவரிக்கிறது.

**க.எண்.262:**

ஜெயங்கொண்ட சோழமண்டலத்து பங்களநாடு மற்றும் மண்டை குலநாட்டு காமப்புல்லூர் எனும் இராஜசூளாமணி சதுர்வேதிமங்கலத்து சபையினர் ஜனநாத விண்ணகர் கோயில் பள்ளி கொண்டருளிந்த தேவரின் வழிபாட்டிற்குத் தானமாக வழங்கிய நிலத்திற்கு வரி விலக்கு அளித்த செய்தியைப் பற்றி விளக்குகிறது.

**க.எண்.263:**

மிலாடு நாட்டைச் சார்ந்து புரோசன் ஈசான தேவன் என்பவர் காமப்புல்லூர் கலியாதித்த விஷ்ணு கிருகத்தில் விளக்கெரிப்பதற்கு ஆடுகள் கொடை அளித்த செய்தியை இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

**க.எண்.264:**

காமப்புல்லூர் வீற்றிருந்த பெருமாளுக்குத் துபாகி வெங்கடாதிரி நாயக்கராயனுக்கு சிறப்புச் செய்ய வேண்டி நிலம் தானமளித்ததை கி.பி. 17ஆம் நூற்றாண்டு கல்வெட்டான இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

**க.எண்.265:**

முதலாம் இராசராசனின் 21ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டான இக்கல்வெட்டில் அபயண்டி ரிஷிகேசவ கிரமவித்தன் என்ற காமப்புல்லூர் ஆளுங்கண உறுப்பினரான இவன் கலியாதித்த விண்ணார்கோயில் முக மண்டபத்தில் விளக்கெரிக்கவும் நந்தவனம் திருத்தியமைக்கவும் நிலம் தானமளித்துள்ளதை விவரிக்கிறது.

**க.எண்.266:**

கலியாதித்த விண்ணகர் கோயிலில் விளக்கெரிக்க ஆடுகளை நன்கொடையாக குடவாய்க்குட்டையைச் சேர்ந்த திருமலைராயன் என்பவன் அளித்தச் செய்தியை இக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

**க.எண்.267:**

கலியாதித்த விண்ணகரதேவர் கோயிலில் விளக்கெரிக்க சோணாட்டு கோமலைச் சார்ந்த வணிகன் திருவடிகள் எனும் பிரிதிராம செட்டி என்பவன் பணம் கொடையாக அளித்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

**க.எண்.268:**

மாணவர்களுக்கு 'சந்தோக' சொல்லிக் கொடுக்கவேண்டி 'சந்தோக கிடைப்புறமாக இவ்வூர் ஆளுங்கண உறுப்பினரான அத்திந்த கிரமவித்தகனுக்கு நிலம் விற்ற செய்தியைக் கூறுகிறது.

**க.எண்.269:**

இக்கல்வெட்டு ராஷ்டிரகூட மன்னன் கன்னரதேவனது 25ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டாகும். ஆளுங்கணத்திலிருந்து நான்கு உறுப்பினர்களுக்கு தானப்புறமாக நிலமளித்ததை விவரிக்கிறது.

**க.எண்.270:**

ராஜகேசரி வர்மனுடைய 6ஆவது ஆட்சியாண்டின் கல்வெட்டு. இவ்வூர் சபையினர் ஆளுங்கணத்தைச் சார்ந்த இரண்டு உறுப்பினர்களுக்கு சந்தோக விருத்தியாக நிலம் வழங்கியதை விவரிக்கிறது.

**க.எண்.271:**

கி.பி. 904ஆம் ஆண்டு கல்வெட்டில் காமப்புல்லூர் ஸ்ரீகோயில் திருமால் வழிபாட்டிற்காக நந்திபோசர் தளிபெருமான் நிலம் வழங்கியதைக் கூறுகிறது.

**க.எண்.272:**

இராஷ்டிரகூட மன்னன் கன்னரதேவனுடைய 25ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு அருங்கணத்தைச் சார்ந்த நான்கு உறுப்பினர்கள் குறிப்பிட்ட நிலத்தினை வாங்கிபட்ட விருத்தியாக தானமளித்துள்ளனர் என்பதைத் தெரிவிக்கிறது.

**க.எண்.273:**

காமப்புல்லூர் சபையினர் செய்யாற்றின் மேல்கரையில் உள்ள திருவேங்கைப் பள்ளி பரமசுவாமியின் வழிபாட்டிற்கு நிலம் வழங்கி வரி நீக்கியும் அளித்துள்ளனர்.

**க.எண்.274:**

இக்கோயில் மண்டபத்தின் மற்றொறு தூணில் கன்னரதேவனுடைய 25-வது ஆட்சியாண்டு கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் பல்குறைக்கோட்டத்து வசுகூர் நாட்டு காமப்புல்லூர் ஊரில் அமைந்துள்ள மண்டபத்தில் இரண்டு விளக்கெரிக்க அபயந்தி தாமோதரன் என்பவர் அரைவேலி நிலம் தானமளித்துள்ளார் என்ற விவரத்தினைத் தருகிறது.

**க.எண்.275:**

சுங்கம் தவிர்த்தச் சோழச் சதுர்வேதிமங்கலமான காமப்புல்லூர் கலியாதித்த விண்ணகர் ஆழ்வார் கோயிலுக்கு குலோத்துங்க சோழ பிரிதிவி கங்கரையன் என்பவன் நிலம் கொடையளித்த செய்தியைக் கூறுகிறது.

**க.எண்.276:**

காமப்புல்லூர் மகாதடாகத்திற்கு தூரனடியிலிருந்து வாய்க்கால் வெட்ட கொற்றமங்கலத் தலைவன் உத்தமன் மற்றும் அமைச்சர் மும்முடிச் சோழன் ஆகிய இருவரும் ஏற்பாடு செய்துள்ளனர்.

**க.எண்.277:**

அதே சுவரில் பல்லவ மன்னன் தந்தி விக்கிரமனின் 3ஆம் ஆட்சியாண்டு காலத்திய கல்வெட்டு காணப்படுகிறது. இக்கல்வெட்டு முழுவதும் சிதைந்துள்ளது. படிக்க இயலாத நிலையிலுள்ளது.

**க.எண்.278:**

அப்பகையன் தேவன் எனும் அழகிய சோழ பிரிதிவி கங்கன் என்பவனுடைய பெயர் இடம்பெற்றுள்ளது. ஏனைய பகுதி மிகவும் சிதைந்துள்ளது.

**க.எண்.279:**

அதே தென் புறச்சுவரில் ராஜேந்திர தேவருடைய 14 வது ஆட்சியாண்டு கல்வெட்டு கலியாதித்த விண்ணகர் கோயிலுக்கு நிலம் தானமாக அளித்த செய்தியை தெரிவிக்கிறது.

**க.எண்.280:**

செவ்வப்ப நாயக்கர், குமார இரங்கப்ப நாயக்கர் மற்றும் கொண்டம நாயக்கர் ஆகியோரின் முகவரான திம்மப் நாயக்கர் அம்மன் கோயில் முன்மண்டபம் எடுக்கப் பட்டதைக் கூறுகிறது.

**க.எண்.281:**

அதே சுவரின் ராஜகேசரிவர்மனுடைய 9 வது ஆட்சியாண்டு கல்வெட்டு உள்ளது. முற்றிலும் சேதமடைந்துள்ளது. ஸ்ரீமத் துவாரகை கோயிலைப் பாதுகாக்க வேண்டிய நிலம் தானமளிக்கப்பட்டுள்ளது.

**க.எண்.282:**

உறுப்புட்டூர் நரசிங்கத் திருவேதி என்பவருக்குக் காமப்புல்லூர் சபையினர் நிலம் கொடையாக அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது.

**க.எண்.283:**

பெருமாள் கோவிலின் கிழக்கு மற்றும் வடக்கு புறச்சுவரில் பரகேசரி வர்மனுடைய 8 வது ஆட்சியாண்டு கல்வெட்டு கங்கபெருந்தேவி என்பவள் மூன்று பிராமணர்களுக்கு உணவளிக்க வேண்டி பொன் தானமாக அளித்த செய்தியை அளிக்கிறது.

**க.எண்.284:**

இவ்வூர் சபையினரிடம் இவ்வூர் ஏரியினைத் தூர் எடுப்பதற்கு பிள்ளையார் கோதண்டராமன் உட்பட மூவர் பணம் அளித்துள்ளனர். மேலும் ஓடம் ஒன்றினையும் தானமளித்ததை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

**க.எண்.285:**

விஜயநகர மன்னன் சாளுவ நரசிம்மதேவ மகாராயரின் நட்சத்திரமான அனுஷ நட்சத்திரத்தில் திருவண்ணாமலை கோயில் வழிபாடு செய்ய காமப்புல்லூர் மற்றும் சில இடங்களில் இருந்த நிலத்திற்கு வரி வருவாயை பயன்படுத்திக் கொள்ள அனுமதியளித்தச் செய்தியைத் தருகிறது.

**க.எண்.286:**

தரையில் புதைக்கப்பட்டுள்ள இப்பலகை கல்வெட்டு. பரகேசரி வர்மனுடைய மூன்றாவது ஆட்சியாண்டில் கல்வெட்டு சங்கர நாராயணர் கோயிலை பங்கள நாட்டுத் தலைவரின் தேவியார் கட்டியதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

**க.எண்.287:**

பெருமாள் கோயிலில் மேற்கும் தெற்கும் உள்ள இக் கல்வெட்டு பரகேசரி வர்மனின் 9ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டாகும். முற்றுப் பெறாத இக்கல்வெட்டில் பிடாரி கோயில் மற்றும் காடுகால்கோட்டம் வழிபாட்டிற்கு இவ்வூர் மண்ணுடைக்காரா ஏற்பாடு செய்ததைத் தெரிவிக்கிறது.

**க.எண்.288:**

திரிபுவன சக்கரவர்த்தி ராஜராஜதேவனுடைய 8ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு. இதில் சங்கார நாராயண தேவர், ராஜ நாராயண பெருமாள் ஆகிய கோயில்களின் வழிபாட்டிற்கு நிலையிட்ட பெருமாள் அரச கல்யாண் தானம் வழங்கியதைக் கூறுகிறது.

**க.எண்.289:**

அச்சுதவ மஹாராயருடைய சக ஆண்டு 1462 (கி.பி. 1540)ஆம் ஆண்டு கல்வெட்டாகும். பலகை கல்லில் வெட்டப்பட்டது. அரசனின் ஆணைப்படி காமப்புல்லூர் அய்யன் மங்கரய்யன் என்பவர் வீட்டு மனை அளித்த செய்தியை இக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

# பார்வைப்படி

(இராஜேந்திர சோழன் கல்வெட்டு)

(185 செ.மீ. நீளமும் 138 செ.மீ அகலமும் கொண்ட கற்பலகையில் வெட்டப்பட்ட கல்வெட்டு)

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னிவளர விருநிலமடந்தையும் போர்ச்சயப் பாவை
2. யும் சீர்தனிச் செல்வியுந்த தன்பெருந் தேவியராகி யின் புற நெமதிய லூழியுள்
3. இடதுறை நாடும் தொடர்வன வேலிப்படர்வன வாகியும் சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளி
4. ப்பாக்கையும் கண்ணறகருமுரன் மண்ணைக் கடக்கமும் பொருகடலீழத்தரசர்தமுடியு
5. மாங்காவந் தேவிய பேராங்கெழின் முடியும் முன்னவர் பக்கவர் தென்னவர் வைத்த சுந்
6. தரமுடியுமிந்தினாரமும் தெண்டிரை யீழமண்டலமுழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையிற்
7. ஆடும். குலதனமாகிய பலர் புகழ் முடியும் செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத் தொல்பெரு
8. ங்காவற் பழந்தீவும் செருவிற் சினவி யிருப்தெருகால் அரசுகளை கட்ட பரசுராமன் மேவரு
9. ஞ் சாந்திமத்தீவரண் கருதி இருத்திய செம்பொற் நிருத்தரு முடியும் பயங்கொடு பழிவிடு மு
10. யங்கியல் முதுகிட்டொளித்த சுயசிங்களப்படும் புகழொடு பீடிய யிரட்டாபாடி யேழரை
11. சையிலக்கமும் நவநீதிக் குலப் பெருமைகளும் விக்கிரம வீரர் சக்கர கோட்டமுநீர் படவல்
12. லை மதுரை மண்டலமும் காமிடை வளை இந் நாமனைக் கோணமும் வெஞ்சின வீரர் பஞ்
13. சப்பள்ளியும் பாசடைப் பழன மாசுணி தேசமும் அயர்வில்வன் கீர்த்தியாதி ஏக நகன

14. வயற் சந்திரன் றொல் குலத்திற்ராாதனை விளைமாக் களத்துக் கினயொழும் பிடி

15. த்து பலதனத்தொடு நிறை குலதனக்குவையும் சிபடருந் செறிபிளையொட்ட விழி

16. யமும் பூசுரர் சேருநற் கோசல நாடும் தன்மபாலனை வெம் முணையழித்து வ

17. ண்டுறை சோலைத் தண்ட புத்தியும் இரண சூரனை முறணைத் தாக்கித் திக்கண கீர்த்தித்

18. தக்கண வாடமும் கோவிந்த சந்தன் மாவழிந் தோடத் தாங்காத சாரல் வங்காள தேசமும்

19. தொடுகழற் சங்கொட்டல் மகிழபாலனை வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளிதெ

20. ண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்திய நெடுங்கடலுத்தரலாட

21. மும் வெறிமார்த் தீர்த்த நெறி புணற் கங்கையும் அலைகடல் நடுவும் பலகலஞ்

22. செலுத்திச் சங்கிராம விசையாத்துங்க வர்மனாகிய கடாரத் தரசனை வான

23. கயும் பொருகடல் கும்பக் கரியொடு டிகப்படுத்துரி மையிற் பிரிக்கிய பெருநிதிப் பிறக்களும்

24. போர்த் தொழில் வாசலில் விச்சாதிரத் தோணகுமொ

25. மாயத்தொளி புனைமணிப் புதவமுங் கனமணிக் கதவமும் நிறைசீர் விசயமுந்

26. துறைநீர்ப் பண்ணையும் வண்மலை யூரெயிற்றொன் மலையூரும் சூழ்கடல் சூழ்

27. மாயிரு டிங்கமும் கலங்காவல் வினை இலங்கா சோகமும் காப்புலு நிறை

28. புனல் மாப்பப் பாளமும் காவலர் புரிகை மேவிளம் பங்கமும் விளை

29. ப்பந்தூருடைய வளைப்பந்தூரும் கலைக்தக்களோர் புகழ் தலைத்தக்க கோலமும் தீதா் பல்வினைமாத மாவி லிங்கமும்

30. கலா முதிர் கருந்திறல் லிலாமுரி தேசமும்

31. தேனக்கவார் பொழில்மான வாரமுதொடுகடற் காவற்கரமுரட் கடராமு மா

32. ப்பொரு தண்டாற் கொண்ட கொப்பர கேசரி பன்மராந உடையார் ஸ்ரீ ராஜேந்திர

33. சோழ தேவற்கு யாண்டு யசா ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ப

34. ங்கள நாட்டு காமப்புல்லூரான ராஜசூளாமணி சதுர்வேதிர மங்கல

35. த்து உடையார் ஸ்ரீ கயிலாயமுடைய திருகாமேநக்கர் கோயிலில் தக்ஷ

36. ணாமூர்த்திகளுக்கு சேநாபதி ராஜராஜ பிராம ராயர் கூலிச் சேவ

37. கன் சேந்தன் குமரன் வயப்பித்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு வைத்த

38. ஆடு தொண்ணூறு இவவாரு தொண்ணூறுங் கைகொண்டு சந்திராதித்த

39. வரை திருநந்தாவிளக்க ஒன்றும் எரிப்பதானோம் இவ்வூர் சிவபிராமணர்

40. பராங்ஜ நாராயண பட்டனும் இவன் தம்பிமாரு முள்ளிட்ட சிவபிராமணரோ

41. ம் இராஜசூளாமணிச் சருவேதிமங்கலத்து சபையோம் எங்களூர்

42. ஸ்ரீ கயிலாயமுடைய திருக்காமை நக்கர்க்கு திருநந்தவானமாக நிலமாவது நா

43. ங்கள் காரம்பி சேட்டு திருவயிலூர் செவிரிப்பட்டேன் பிராமணிர்ச் செம்பிராட்ட

44. ச்சாணி பககலும் புள்ளளூர்த் தத்யகிரமவித்தனும் தம்பிமாரு பக்கலும்

45. விலை கொண்டுடை குதிரை வட்டத்தில் நிலம் ஸ்ரீராஜேந்திர சோழன்

46. திருநந்தாவன மொன்று திருநாமஞ்சாத்திக் குடுத்த குழி முன்னூற்று முப்ப

47. தஞ்சு இக்குழி முன்னுற்று முப்பதஞ் குழியுள் திருநந்தவனமாக் குடு

48. த்தோம் சபையோயும் தஷ்ணாமூர்த்திகளுக்கு மூன்று சந்தியும் அர்ச்ச

49. கணக்கு உச்சியம்போது நாணாழி அரிசியால் திருவமுர்துங் கறியமு தொன்று செய்

50. அமுதிரு செவிடு யுந்தயிரமு துரியுமடைக் காயமுதிரண்டு மிலையமுது நாலு

51. க்கு வைத்த நிலமாவது தொழுக் குன்றத்து ஸ்ரீராஜா வதிக்கு மேற்கு கொற்றி வாயி

52. க்காலுக்கு வடக்கு மூன்றாங் கண்ணாற்றஞ் சதுரத்து செலகா நிலங்காலில் குடிப்போகி

53. ற இறை கிடந்த நிலம் கிழக்கடைய இரண்டுமா நீக்கி மேற்கடைய மூன்று மாவில் சுற்று

54. க்கேணி தேவர்க்கு வடக்கடைய ஒரு மாநீக்கு இத னொருமடைய நிலமிரண்டு மாவி

55. ல்குழி அயிரத்துரு பத்திநாலும் பொன்னிரு கழஞ்சும் வைத்தொம் சபை

56. யோம் இன்னிலமும் பொன்னாங் கொண்டு நின்னவந்தம் சந்திவாதித்த வல்

57. சாமர்தப்படி செலுத்தக்கடவார் இவ்வூர் சிவபிராமணர் ஹரங்க

58. ஜ நாராயண பட்டனுமிவன் தம்பி பெரியானுமிக்குடி நம்பிமுள்ளி

59. ட்டார் இது மாகேஸ்வர ரக்ஷை

## திருக்காமீசுவரர் - வாயில் முன்புறம் உள்ள தனிக் கல்வெட்டு

1. துந்துபி வருஷம்

2. -னனி புலைரு - அப்பயரன் கார

3. க்கு கடிவார சொக்க பிள்ளை

4. அய்யனும் உடையார் திருக்காமி

5. சுரம் முடைய நயனார் கோயில்

6. . . . த்தரரும் திருக்காமி அவதானியாதி

7. உலரப்பாடி குமாரசுமிக்கு வசந்தம்

8. அஞ்சு நாள் நடத்திரொம் என்று நிச்சயத்து

9. கொள்ளுரை கயிலயிதுக்கு திருக்காமி அப்ப

10. . . .

11. . . .

இக் கல்வெட்டு இக்கோயிலின் முன் வாயிலின் இடப்புறம் அமைக்கப்பட்டுள்ளது. 3 அடி உயரம் மட்டும் வெளிப்புறம் உள்ளது. கல்லின் இருபுறமும் சிதைந்துள்ளது. மேலும் இக் கல்வெட்டின் மீதும் உள்ள வரிகள் மண்ணில் புதைந்துள்ளது.

### திருக்காமீசுவரர் திருக்கோயில்
### கருவறை அதிட்டானம் கிழக்கு பகுதி

1. சாளுவன் . . .

2. ஸ்ரீ அச்சுநாத தெவமஹாராயர்

3. சித்திரை . . . செங்கம் புத்தெரிந்சாத்தாரில் வலியம்மா ஆக, . . .

4. ருக்காமிசுரமுடைய தம்பிரானார்க்கு எங்கள் உபையமாக . . .

5. . . . பொகத்துக்கும் பந்தம் எண்ணெய்க்கும் நான் . . .

6. குழி . . . இக்குழி . . . ஒற்றிக்கு . . . முப்பது . . .

7. . . . யித்தவரையும் சந்தி . . . ம் பறையும் நடக் . . . தன்

8. காராம்பசுவை கொன்ற பாவத்திலே பொககடவார்கள் இவை காமப்புல்லூர்

9. கணம் . . .

**திருக்காமீசுவரர் - முக மண்டபத்தின் வடக்கு பகுதி சுவர்**

1. உ மன்மத வருஷம் மாசி காமப்புல்லூர் . . . லிருக்கும் உண்ணாமலை வில்வராயர் பகவனான உடையார் திருக்காமீஸ்வரமுடைய தம்பிரானார் சிபண்டாரத்துக்கு

2. தன் மகன் தன்மம் பண்ணிக் குடுத்தபடி நகரத்தார் பூஜை மானியத்தில் . . . பூசை மான்யம் . . . பூசை மான்யம் . . .

3. . . . செல்லப் பெருமான் . . . பூஜை மான்யம் . . . செய திருமலையப்பன்

4. . . .

. . .

. . .

5. . . . வயலுக்கும் கிழக்கு . . .

ந.தவன்குதை குற்றம் . . . ப்பன் தென்வருக மாயலுக்கும் . . .

6. நடக்கிறபெறச் . . . நிலவமைப்பர் . . . தாங்க குளடி அனுபவித்து குடுதான் . . .

7. திருமாவிலை . . . பண்ணுவார் கடவார்கள் கவும் இந்த ஒற்றி நிலம் முடைய . . . த்துக்கு . . . ப்பால் நிலம் . . . ஒற்றி

8. மத்துதன்மம் தன்டரைய . . . நடத்த வதாக கடவார்கள் . . . தன்மத்துக்கு . . . பண்ணினவர்கள் . . .

9. . . . காராம் பசுவை . . . கொன்ற பாவத்திலே . . .

10. . . . காமப்புல்லூர் உடைய ஆகிய நாராயணன் எழுத்து

இக்கல்வெட்டு அமைந்துள்ள பகுதி முழுவதும் சிமெண்டால் பூசப்பட்டு வெள்ளை அடிக்கப்பட்டுள்ளதால் சரியாகவும் முழுமையாகவும் படிக்க இயலவில்லை. முன்

மண்டபத்தின் வடக்கு பகுதி சுவர் முழுவதும் இக் கல்வெட்டு 10 வரிகள் கொண்டாதாக அமைந்துள்ளது.

திருக்காமீஸ்வரர் - கிழக்கு புறச்சுவர் பகுதி (வலப்புறம்)

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க செ

2. ாழ தெவற்கு யாண்டுவது அணைகட்டின பிருதுவிகங்

3. கன் கூத்தாடுதெவன் திருமாள் அழகிய சொடன் செய்வித்தா

4. ன் இத் திருமகனின் . . . காமடைப் பள்ளியும் இதுக்கு திருமடை

5. ம் பள்ளி . . . வி

6. ஆயிரங்குழி விட்டெடன் . . .

இக் கல்வெட்டு இக் கோயிலின் கிழக்கு புறச் சுற்றுச் சுவரின் வலப்புறம் காணப்படுகிறது. எழுத்துக்கள் சரியாக படிக்க முடியவில்லை. தொடர்ச்சி இல்லாமல் காணப்படுகிறது.

திருக்காமீசுவர் கோயில் கருவறையின் வடக்குப் பகுதி

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மன்மஹா மண்டலெசுரன் . . . சுரகண்டாரி

2. பூறுவபக்ஷத்து . . . ண் பச்சிம . . . உத்திரா . . .

3. . . . தம் சர் . . . மெல் செல்லா நின்ற நந்தன் வருஷம் . . .

4. உள்ளிட்டாரும் காமப்புல்லூர் நகரத்தாரும் உடையார் தி.

5. . . . ஸஸவதி . . . பண்ணி விக்கியம் . . . நாச்சியார்

6. ஒற்றி பிடித்து பொன்னி குழி . . . குழி . . . பிடாரி பட . . .

7. முன்னூறு குழியும் . . . பொகத்துக்கும் . . . பந்தத்துக்கும் . . .

8. . . . மத்துக்கும் அமுதம் பண்ணின . . .

9. . . . உடையார் சூரி நாராயன் எழுத்து

கருவறையின் வடக்குப் புறம் உள்ள அதிட்டானைப் பகுதியில் காணப்படுகிறது. கல் முழுவதும் சிதைந்துள்ளது.

## திருக்காமீசுவரர் திருக்கோயில் அதிட்டான பகுதி

1. ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹாமண்டலேசுவரன் அச்சுனாத தேவ மஹாராயர்..........பண்ணி அருளா நின்ற . . . செல்ல நின்ற . . . சிங்க நாயற்று அமரபஷத்து . . . . . பெற்ற . . . திருக்கா

2. . . . பூசிக்கும் நம்பிமாராகக் கட்டளை பண்ணி . . . திருத்துகுழி . . . வில்லவராயர் பகவானார் ஒற்றி . . . நானன்று இருபது நாள் . . .

தொடர்ந்து எழுத்துகள் காணப்படவில்லை.

## துவாரபாலகர் வலப்புறம்:

1. . . . வெங்க . . . திராயர் . . . சயம் . . .
2. மகுள . . . ன்ற . . .
3. . . . துராகோயர் . . . பூறுவவஷத்து
4. சொமவாரத்து . . . காமப்புல்லூர் திருக் . . .
5. . . .
6. திருபாணயக . . . த்து . . .
7. . . . வருஷ . . . தின . . . வருஷம் . . . நினநிமித்தம்
8. வராக . . . காராம் பசுவை கொன்ற பாவத்திலே இருக்க
9. கக் கடவாரதகவும் . . .

## திருக்காமீஸ்வரர் திருக்கோயில் கிழக்கு மண்டபம்

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ
2. . . . கொட்டத்து . . . ட்டு . . .
3. . . .
4. ணாயநான குலோத்துங்க சொழி பிருதிவி . . . கங்க . . . தெவரானக் கட்டளை . . .
5. விட்ட குழி நாலாயிரம் இத் சந்திராதித்த வரையில் கடவதாகவும் இது மா . . . கெங்கை இடை

6. . . . இடைக்கு . . . காவாந வல்லவராயின் . . . பணியால் . . .

7. . . .

**பெருமாள் கோவில்:**

1. ஸ்வஸ்தஸ்ரீ கொவிசைய கம்பவிக்கரம வர்மர்க்கு யாண்டு . . .

2. வசகூர் நாட்டு பக்கல் காமப்புல்லூர் ஸபையொம் கிழவதிகுமத

3. ரையும் . . . பக்கல் . . .

4. . . .

5. . . .

**சம்புவராயர் கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ சகலலோக சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராசநாராயணன் பங்கள நாடு காமப்

2. புல்லூர் ஊரவற்க்குத் தங்களூர் . . .

3. பாதியும் பட்டவிருத்தியும் தேவைக்கு . . .

4. பணமும் சீவிதப்பற்றும் நீக்கி . . .

5. ஆறாவது . . . மாத முதல் கடமை . . . எழுத்தளவு

6. . . . விருத . . . அரிசி . . . ப்பு.ஓலை . . .

# துணை நின்ற நூல்கள்


1. கல்வெட்டு ஆண்டறிக்கை 1938–39 / 244–289.
2. சோழர் கலைப்பாணி / எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்.
3. பல்லவர் செப்பேடு / தி.நா.சுப்ரமணியன்
4. தமிழக வரலாறு / வெங்கட்ராமன், ஆர்.
5. வட ஆர்க்காடு மாவட்ட வரலாறு / "சோமலெ"
6. சம்புவராயர் வரலாறு / இல.தியாகராசன், (ம) கோ. தங்கவேல்
7. The Cholas / S.R. Balasubramaniyam
8. கோயிற் களஞ்சியம் வட ஆர்க்காடு மாவட்டம் / முத்துசாமி பிள்ளை
9. தென்னிந்திய கோயில் சாசனங்கள் பாகம் 3. பகுதி -1
10. The Cholas / KA. Neelakanda Sastri
11. Hindu Iconogarphy / S.P. Tewari
12. Studies in the History of India / K.K. Pillay.
14. Early Chloa Art Part one / S.R.Balasubramaniyam
15. Vijayanagar Rule in Tamil Nadu. /
    V.Karashima,
    P.Shanmugam,
    V.Subbrayala
16. Pallava History / Subramaniyam
17. Architectural Survey of Temples K.R.Srinivasan
18. THE HINDU Dt. 20.2.96
    தினமலர் 17.2.96 வேலூர் பதிப்பு
    மாலைமலர் 17.2.96 வேலூர் பதிப்பு
19. திருவதிகை வீரட்டானம் / முனைவர் நா. மார்க்சிய காந்தி
20. குடுமியான் மலை / முனைவர் சொ. சாந்தலிங்கம்



காப்பலூர் வரைபடம்




காப்பலூர் வரைபடம்



திருக்காமீசுரர் திருக்கோயில்



திருக்காமீசுவரம் - கல்வெட்டுபகுதி



விஜயராகவ பெருமாள் கோயில்



விஜயராகவ பெருமாள் கோயில் - கருவறை



விஜயராகவ பெருமாள் கோயில் விமானம்



விஜயராகவ பெருமாள் கோயில் - கல்வெட்டுப் பகுதி



கணபதி
13-ஆம் நூற்றாண்டு



சூரியன்
13-ஆம் நூற்றாண்டு



கணபதி
10-ஆம் நூற்றாண்டு



பைரவர்
16-ஆம் நூற்றாண்டு

சங்கநாராயணர்
12-ஆம் நூற்றாண்டு



ஆறுமுகம் வள்ளி தெய்வானை
17-ஆம் நூற்றாண்டு



முருகன், வள்ளி, தெய்வானை
16-ஆம் நூற்றாண்டு



விஜயராகவ பெருமாள் கோயில் மணி



கௌரி தாயார் 17-ஆம் நூற்றாண்டு



மரச் சிற்பங்கள் வாகனங்கள்



திருப்பரிகலன்கள்



இராமலிங்கர், 19-ஆம் நூற்றாண்டு

நடராஜர், 11-ஆம் நூற்றாண்டு

மாணிக்கவாசகர் 11-ஆம் நூற்றாண்டு



சோமஸ்கந்தர், காளி அம்மன் - 14-ஆம் நூற்றாண்டு



பார் புகழ் படிமங்கள்



காலிங்க நர்த்தனர்



ஸ்ரீதேவி பெருமாள் பூமிதேவி



தட்சிணாமூர்த்தி